தனிச் சிற்றாய்வு 06

வெளியீடு: மார்க்கா நிறுவனம், இலங்கை.

2001 ISBN 955-582-047-3
ISSN 1391-6688

அட்டை வடிவமைப்பு:
வரையறுக்கப்பட்ட கொப்பிலைன் நிறுவனத்தைச் சார்ந்த தினி குருகுலசூரிய.

அச்சுப் பதிவு:
வரையறுக்கப்பட்ட யூனி ஆர்ட்ஸ் நிறுவனம்.

உள்ளூர் விலை:
சிங்களம் - தமிழ் ரூபா ~~30.00~~ 50
ஆங்கிலம் ரூபா 50.00

மார்க்கா நிறுவனத்திலோ அன்றேல் புத்தகக் கடைகளிலோ கொள்வனவு செய்யலாம்.

வெளி நாட்டு விலை:
தொகைக் கட்டளைகளுக்கு மாத்திரம்: (தபாற் செலவு உட்பட):
தெற்கு, தென் கிழக்கு ஆசியா: பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 2/- ஆக.
வட அமெரிக்கா பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 3/- ஆக.
மற்றைய நாடுகளுக்கு பிரசுரமொன்றுக்கு அமெரிக்க $ 2.50 ஆக.

குறிப்பிட்ட எந்த பிரசுரங்களுக்கும் மார்க்கா நிறுவனத்துக்கு கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பலாம். வங்கி வரையல் மூலம் கொடுப்பனவு (குறைந்தளவு அமெரிக்க $ 12/-)
மார்க்கா நிறுவனத்தின் பெயருக்கு எழுதப்பட்டு மார்க்கா நிறுவனம்,
93/10, துட்டுகெமுனு வீதி, தபாற் பெட்டி இலக்கம் 601, கொழும்பு 06
என விலாசமிட்டு அனுப்பவும்.

உசாவல்களுக்கு: 94-1-828597. அல்லது மின் தபால் : marga@sri.lanka.net

[illegible]

இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
மீள் நினைவு, மீள் இணக்கம், மீள் விளக்கம்.

# தமிழ்த் தேசியம்

## தேவநேசன் நேசையா

2001
மார்க்காவின் இனக்குழும மீள் இணக்கம் தொடர்பான தனிச் சிற்றாய்வுத் தொடர் இலக்கம்: 6

மார்க்கா நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

# இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு : மீள் நினைவு, மீள் விளக்கம், மீள் இணக்கம்

1999 சனவரி முதல் மார்க்க நிறுவனம், "இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு: மீள் நினைவு, மீள் விளக்கம், மீள் இணக்கம்" என்ற தலைப்பில் ஒரு செய்திட்டத்தை ஊக்கி வளர்த்து வந்துள்ளது. இதற்கென எழுதுமாறு வேண்டப்பெற்ற கட்டுரைகளும் செயலமர்வுத் தொடர்களின் பொழுது நடந்த விவாதங்களும் கீழ்க்காணும் ஒன்றினுள் மற்றதும் வந்து விடுவதான, கொள்குறிகளை – நோக்கங்களை – ஈட்டுவனவாக அமைந்தன.

* முதலாவதாக, இந்த இனக்குழுமப் போட்டியின் கதையை, அவ் அரசியல் வானில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு பகுதியினரதும், மனக்குறைகள் பற்றிக் கவனம் செலுத்துவனவாகக் கட்டமைத்தல், ஆனால் அதே வேளையில், இந்தப் போராட்டத்தின் உலகியல் நிலைப்பட்ட வளர்ச்சிப் போக்குப் பற்றி ஓர் ஆதளப் பார்வை உடையதாகவும் அமைதல் வேண்டும்.

  இரண்டாவதாக, மோதல் பற்றிய விளக்கங்களை முன்வைக்க முனையும் பொழுது பல்வேறு புலமைத்துறைகளிடையேயும், அதேவேளையில், இம்மோதலிற் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு சாராரிடையேயும் ஒரு கருத்தொருமிப்புக் காணும் வகையில் அமைதல் வேண்டும்.

* இறுதியாக, இவை எதிர்நிலைப்பட்டு நிற்கும் பார்வை நோக்குக்களிடையே மீளவும் இணக்கத்தை – சமரசத்தை ஏற்படுத்துவதற்கான எண்ணக்கரு நிலைப்பட்டனவும், புலமைத்துவ அடித்தளத்தை ஏற்படுத்துவனவுமாக அமைதல் வேண்டும்; அதே வேளையில், இந்தச் சமகால மோதலில் இடம் பெற்றுள்ள முன்னணி எதிராளிகளிடையே ஒரு கருத்தொருமிப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும் பாதைகளைக் கண்டறிவதாக அமைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்திட்டம் நிறைவுறும்பொழுது (ஏறத்தாழ 2002இல்) முப்பது கட்டுரைகளைக் கொண்ட ஒரு வெளியீடு கொண்டுவரப்படும். அதில் இடம் பெறவுள்ள பல கட்டுரைகள், இச்சிற்றாய்வு வெளியீட்டுத் தொடரில் இடம் பெறும். நிதியுதவி கிட்டியதும் மேலும் சில சிற்றாய்வுகளும் இதில் இடம்பெறும். கட்டுமட்டான விலையிடப் பெற்ற இச் சிற்றாய்வுகள் இந்நாட்டின் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பெறும். இவை, இந்நாட்டின் அறிவாளிகள், ஊடகவியலாளர், அரசியற் செயலாண்மையர், அரச சார்பற்ற நிறுவன ஆளணியினர் ஆகியோரிடத்துச் சென்றடையும் என்றும், அவ்வம் மட்டங்களில், சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய சிந்தனைகளுக்கும், கலத்தாய்தல்களுக்கும் இடமளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வழிவரும் பலாபலன்கள், தீர்மானங்கள் மேற்கொள்வோரை, அவர்கள் சமாதானத்துக்கான ஒரு ஸ்திரமான கட்டமைப்பை உருவாக்க முனையும் பொழுது, அவர்களுக்குப் பாதையமைத்துக் கொடுப்பனவாக அமையும் என்றும் எண்ணப்படுகிறது.

இக்கட்டுரை வழியே புலப்படும் இவ் ஆய்வறிஞரின் ஈடுபாட்டுத் திண்மையையும் அறிவுப் புலமையையும் பெரிதும் மதிக்கிறோம். இக்கட்டுரை பற்றிக் குறிப்புரை கூறிய, அன்றேல் செயலமர்வுகளின் பொழுது கருத்துக்கள் எடுத்துக்கூறிய அறிவாளரின் ஈடுபாட்டுத் திண்மைக்கும் நாங்கள், எங்கள் கூட்டுநிலை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மொழி பெயர்ப்புக்களை மேற்பார்வையிட்ட பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பங்களிப்பினையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

பிரதான செய்திட்டத்துக்கான நிதியுதவியைச் செய்த ''நொறாட்'' நிறுவனத்துக்கும், இந்தச் சிற்றாய்வு வெளியீட்டுத் தொடருக்கு நிதியுதவி வழங்கும் GTZ, SIDA நிறுவனங்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

வாசகர்கள் தங்கள் குறிப்புரைகளையும், ஆலோசனைகளையும், அவை ஆய்வாசிரியராலும், இந்தப் பதிப்புக் குழுவாலும் எடுத்து நோக்கப் பெறுவதற்கு (அவற்றை) முதன்மை ஒருங்கிணைப்பாளருக்குத் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர் – தொலைநகல் 828597, மின் தபால் Marga@Sri Lanka net.

மைக்கேல் றொபேட்ஸ், கொட்ஃப்பிறி குணதிலக, தேவநேசன் நேசையா

*முதன்மை ஒருங்கிணைப்பாளர்*

# தமிழ்த் தேசியவாதம்

## *தேவநேசன் நேசையா*

இக்கட்டுரைத் தலைப்பு அவ்வளவு பொருத்தமானதல்ல. ஏனெனில், இலங்கைத் தமிழர் என அறியப்படுகின்ற இனக்குழுமத்தின் தேசியவாதம் பற்றியே இதில் ஆராயப்படுகின்றது. இலங்கைத் தமிழர் என்ற பதப் பிரயோகம்கூட இங்கு பொருத்தமற்றது. ஏனெனில், இப்பதம் உள்ளடக்கும் இலங்கையில் வாழும் வேறு தமிழ்க் குழுமத்தினரான மலையகத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் அல்லர். காலப் போக்கில் இலங்கைத் தமிழர்களதும் மலையகத் தமிழர்களதும் இனத்துவ அடையாளங்கள் ஒன்றிணையுமாயின் இலங்கைத் தமிழர் என்ற பதப் பிரயோகம் இலங்கையில் வாழும் தமிழர்களையும் இந்தியாவிலும் பிற இடங்களிலும் வாழும் தமிழர்களையும் சரியான முறையில் வேறுபடுத்தப் பயன்படுத்தப்பட முடியும். அப்போது இலங்கையில் வாழும் தமிழர் மத்தியில் வேறுபாடுகளைக் காணும் அவசியம் இருக்காது. "அரசியல் ரீதியில் சரியான" புதிய பதங்களை உருவாக்கவோ, பிற்கால வளர்ச்சியை எதிர்வு கூறவோ நான் முனையவில்லை. ஆனால், தமிழ்த் தேசியவாதம், இலங்கைத் தமிழர் ஆகிய பதங்களை அவற்றின் நன்கு அறியப்பட்ட அர்த்தத்திலேயே நான் இங்கு பயன்படுத்தியிருக்கிறேன்.

இலங்கையில் தமிழ்த் தேசியவாதம் பற்றிய ஆய்வுகளின் போதாமை என்னை மட்டுப்படுத்தியுள்ளது. குறிப்பாக, பண்டைக்காலம் முதல் தற்காலம் வரை தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது. இதுவரை வெளியிடப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகளிலேயே நான் முற்றிலும் தங்கியுள்ளதால், இப்போது உடனடியாகக் கிடைக்கக்கூடிய ஆவணங்களின் வரையறைகள் என்னை மட்டுப்படுத்தியுள்ளன. இதன் விளைவாக நான் விரும்பியதுபோல் இவ்வாய்வு முழுமையானதல்ல.

### தேசியவாதம்

தேசியவாதம் என்றால் என்ன? இக்னாரிஃப் (1995:3) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> ஓர் அரசியல் கொள்கை என்ற வகையில், தேசியவாதம் என்பது உலக மக்கள் தேசிய இனங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தேசிய அரசுகளுக்குள் சுய ஆட்சி அலகுகளாக அல்லது தம்மளவில் தேசிய அரசுகளாக அமையும் சுயநிர்ணய உரிமை உண்டு என்றும் கருதும் ஒரு நம்பிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒரு கலாசார இலட்சியம் என்ற வகையில், தேசியவாதம் என்பது, ஆண்களும் பெண்களும் பல்வேறு அடையாளங்களைக் கொண்டிருக்கும் போதிலும் தேசிய இனமே அவர்களுக்குரிய அடிப்படை அடையாள வடிவத்தைத் தருகின்றது என்ற கண்ணோட்டத்தைக் குறிக்கின்றது.

> ஒரு தார்மீக இலட்சியம் என்ற வகையில், தேசியவாதம் என்பது ஒரு வீரத்தியாக ஒழுக்கம், அக அல்லது புற எதிரிகளிடமிருந்து தன் தேசிய இனத்தைப் பாதுகாப்பதில் வன்முறையைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்துதல் என்பவற்றைக் குறிக்கும்.

மேற்குறிப்பிட்ட அரசியல் வரைவிலக்கணம் மிகத் தெளிவாகவும் மயக்கத்துக்கு இடம் அற்றும் இருக்கும் அதேவேளை, பிரச்சினைக் குரியதாகவும் உள்ளது. தேசியவாதம் தேசிய அல்லது துணைத் தேசிய எல்லைகளுக்குள் கட்டுண்டதா? தேசிய சுதந்திரத்தை அல்லது ஆள்புலத்தைக் கொண்ட சுய அரசாங்கம் ஒன்றை அடையும் அபிலாஷை தேசியவாதத்துக்கு அத்தியவசியமானதா? தமக்கென்று சொந்தமான ஒரு சுதந்திர அரசு அல்லது ஒரு சுய ஆட்சி அலகில் வேர் கொள்ளாத (அல்லது அந்த அபிலாசையே இல்லாத) ஒரு தேசியவாத உணர்வுடைய மக்கள் (உதாரணமாக மலேசிய சீனர்கள்) உலகில் இல்லையா? ஒரு 'தாயகத்திலிருந்து (தன்னிச்சையாகவோ அல்லது நிர்ப்பந்தம் காரணமாகவோ) வெளியேறி பிற நாடுகளில் புலம் பெயர்ந்தோராகச் சிதறலாக வாழ்வோர் (உதாரணமாக அயர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்கர்கள், இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடாவாசிகள்) தங்கள் தாயகத்துக்குத் திரும்பிச் செல்லும் அபிலாசையைக் கட்டாயம் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? இன்றைய யதார்த்தத்தை உள்ளடக்கும் வகையில் தேசியவாதம் பற்றிய ஒரு வரைவிலக்கணம் நமக்கு அவசியமாகும். இந்த வரைவிலக்கணம் ஒருபுறத்தில் (பெரும்பாலும் தங்கள் சொந்த நாட்டில் வாழும்) மலேசிய சீனர்களையும் மறுபுறத்தில் (எப்போதாவது தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லும் உள்நோக்கம் அற்ற பெரும்பாலோரைக் கொண்ட) புலம் பெயர்ந்த அமெரிக்க அயர்லாந்தினர், இலங்கைத் தமிழ்க் கனடாவாசிகள் ஆகியோரையும் உள்ளடக்க வேண்டும். இவ்விரு வகையான தேசியவாதங்களும் பண்பாட்டுத் தேசியவாதமாக இருக்கும் அதே அளவுக்கு அரசியல் தேசியவாதமும் ஆகும். உண்மையில் பண்பாட்டுக் கூறு அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

தேசிய அரசுகளுக்குள் சுயாட்சி அலகுகளைக் கொண்ட சுயநிர்ணய உரிமை அல்லது தமக்கென்று சொந்தமான தேசிய அரசுகளைக் கொண்ட சுயநிர்ணய உரிமை என்ற வகையில் இக்னாீ∴ப்



கூறும் அதிக வரையறுப்புடைய வரைவிலக்கணத்தைத் தவிர்த்து தேசியவாதத்துக்கு நாம் எவ்வாறு வரைவிலக்கணம் கூறமுடியும்? குழுப் பிரக்ஞையில் இருந்து தேசியவாதத்துக்கு இட்டுச் செல்லும் புள்ளி எது? றொபேட்ஸ் (1997:439-41) மாற்றீடான இரண்டு ஐரோப்பிய தேசியவாத மாதிரிகள் பற்றிக் கூறுகிறார். முதலாவது, பெரிதும் குடியுரிமை அடிப்படையில் வரையறுக்கப்படும் பாரம்பரிய ஐரோப்பிய மாதிரி. இது பல இனங்கள் வாழும் வேறு நாடுகளுக்குச் சிறிதும் பொருத்தமற்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கூட இந்த மாதிரி தொடர்ச்சியாகக் குலைக்கப்பட்டு வருகின்றது. இரண்டாவது, பண்பாடு, மொழி, இனத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பிய மாதிரி. இது தென்னாசியாவுக்கு மிகவும் பொருத்தமானது. ஆனால், இலங்கை உட்பட இப்பிராந்திய நாடுகளின் விசேடமான பன்மைத்துவம் மத்திய, கிழக்கு ஐரோப்பாவை விட மிகவும் சிக்கலானது.

உள்நாட்டிலும், பிராந்தியத்திலும், சர்வதேச நிலையிலும் தேசியவாதம் வெவ்வேறுவகையில் பேரழிவுக்குரிய மோதல்களுக்கு வழிவகுத்துள்ளது. இதன் விளைவாக ஒரு எதிர்மறையான படிமத்தை அது பெற்றுக்கொண்டது. ஆனால், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது எல்லா சமூகங்களிலும் ஒரு முக்கிய அம்சமாகவே காணப்படுகின்றது. 'கோன' (1944) அவதானித்துள்ளபடி,

> தேசியவாதம் ஒரு பிரக்ஞையின் செயல்;...... மனிதனின் மனம் சார்ந்த வாழ்க்கை ஒரு குழுப் பிரக்ஞையின் ஆதிக்கத்துக் குட்பட்டது போலவே, தான் எனும் பிரக்ஞையின் (ego consciousness) ஆதிக்கத்துக்கும் உட்பட்டிருக்கின்றது. இவ்விரண்டும் தன் குழுவுக்கும் அதற்கு வெளியே உள்ளவற்றுக்கும், தானுக்கும் வெளியே உள்ள உலகுக்கும் இடையில் உள்ள வேறுபாடு, எதிர்ப்பு என்பதை சார்ந்த அனுபவங்களின் ஊடாக நாம் வந்து சேரும் பூரணமான மனநிலைகளாகும்.

தேசியவாதத்துக்கு அடிப்படையான முன்தேவை ஒரு சமூக உணர்வாகும். தேசிய இனங்கள் கற்பனைச் சமூகங்களாகும் (அன்டர்சன், 1991); இவற்றின் புறவடிவமும் பண்புகளும் மாறக்கூடியன; இனம், மொழி, மதம், பிராந்திய எல்லை, குடியுரிமை, வரலாறு ஆகியவற்றின் ஏதோ ஒன்றின் அடிப்படையிலோ அல்லது இவை எல்லாவற்றின் அடிப்படையிலோ இயந்திரப் பாங்கில் நாம் இவற்றை வரையறுக்க முடியாது என்பது அண்மைக்காலக் கூற்று மட்டுமல்ல. 1917 இலேயே இத்தகைய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசிய இனம் ஒரு தேசிய இனம்தான். ஏனெனில். அதன் உறுப்பினர்கள் தொடர்ச்சியாக, மயக்கத்துக்கு இடமில்லாமல் அப்படியே நம்புகிறார்கள். தேசியம் என்பது முற்றிலும் அல்லது பிரதானமாக ஒரே மரபினத்தை அடிப்படையாகக் கொண்டிராமையால், ஐக்கியத்துக்கான அநேகமான அடிப்படைக் கூறுகள் இல்லாத நிலையிலும் அது வளர்த்தெடுக்கப்பட முடியும் (Muir:1917).

இங்கு தேசியவாதம் என்பது மரபினம் (race), மொழி, மதம், ஆள்புலம், குடியுரிமை அல்லது வரலாறு என்பவற்றின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட ஒரு கருத்துப்பொருள் அல்ல. (இவை ஒவ்வொன்றும் பற்றிய பிரக்ஞை இது தொடர்பாகக் கவனத்தக்குரியதே எனினும்), அதை நாம் அவ்வாறு பொருள்கொள்ள முடியாது. பொது அபிலாசைகளை ஊக்கப்படுத்துவதற்காக ஐக்கியப்படுத்தும் ஒரு தேவையில் இருந்து எழும் ஒரு கூட்டிணைப்பாகவும் (இக் காரணி முக்கியமானது எனினும்) நாம் இதைக்கொள்ள முடியாது. ஆனால் 'கேற்ஸ்' (Geerts 1963: 109-10) குறிப்பிடுவதுபோல ஒரு பற்று மற்றும் உறவு உணர்வில் இருந்து எழும் ஒரு ஐக்கியமாக நாம் அதைப் பொருள் கொள்ளலாம். அவருடைய கருத்துப்படி

இரத்த ஒற்றுமை, பேச்சு, சடங்கு சம்பிரதாயம் என்பவை தவறற்றவையாகவும் சிலவேளை தம்முள்ளும் தம்மளவிலும் அதிக வலிமைமிக்கனவாகவும் காணப்படுகின்றன. ஒருவர் தனது உறவினருக்கு, தனது அயலவருக்கு, தனது மதத்தவருக்குக் கட்டுப்பட்டவராக இருக்கிறார். இது முற்றிலும் தனிப்பட்ட பற்று காரணமாகவோ, நடைமுறைத் தேவை காரணமாகவோ பொதுவான நலன்கள் காரணமாகவோ அல்லது கடப்பாடு காரணமாகவோ அல்ல; ஆனால் பெரும்பாலும் அந்தப் பிணைப்புக்கே உரிய, அதனோடு தொடர்புபடுத்தப்படுகின்ற விளக்கமுடியாத அர்த்தத்தின் விளைவாகும். இத்தகைய தொன்மையான பிணைப்புகளின் பொதுவான வலிமையும், அவற்றின் முக்கியமான வகைகளும் ஆளுக்கு ஆளும், சமூகத்துக்குச் சமூகமும், காலத்துக்குக் காலமும் வேறுபடுகின்றன. ஆனால் சில பிணைப்புகள், ஒவ்வொரு சமூகத்திலும், எல்லாக் காலத்திலும் சமூக ஊடாட்டத்தில் இருந்து அன்றி ஒரு இயற்கையான, ஆன்மீக ரீதியான உறவிலிருந்து வருவதாகவே கிட்டத்தட்ட ஒவ்வொரு தனிமனிதருக்கும் தோன்றுகின்றன.



ஆனால் தேசியவாதம் குழுமப்பிரக்ஞைக்கு அப்பால் அரசியல் பரப்புக்குள் வியாபித்துச் செல்கின்றது. ஆகவே மேலே கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் வெளிப்படையான ஓர் அரசியல் பரிமாணம் இல்லாமல் முழுமைபெறாது. "இனக் குழுமங்களையும், சமூகங்களையும் அரசியல் நலன்களைப் பெறுவதன் பொருட்டு எழுச்சியடையச் செய்யும் நடைமுறைகளிலிருந்து" (Brass,1974:9) அல்லது அடிப்படையில் "அரசியல் அலகும், தேசிய அலகும் ஒன்றாக இருப்பதை வேண்டி நிற்கும் ஒரு அரசியல் நலக் கொள்கையே தேசியவாதம்" (Gellner, 1983:1) என்பதில் இருந்து இது வரமுடியும். இந்த அரசியல் அலகு ஒரு சுயாதீனமான தேசிய அரசாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

ஒரு வரலாற்றாசிரியர் எந்த ஒரு குழுமத்துக்கும் தேசியத்தன்மையை ஏற்றிப் பேசும்போது, அக்குழு செயற்படுத்தக்கூடிய சுயாதீனச் செயற்பாடுகளுக்குச் சார்பான ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறார்; தேசியத் தன்மையை மறுக்கும்போது அக்குழுமத்தின் சுயாதீனத்துக்கு அல்லது சுயநிர்ணயத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறார் (Potter 1962:930) என்பதையும் நாம் அவதானிக்கின்றோம்.

கீயற்ஸ் (Geetz) (1963:109-10), பிறாஸ் (Brass) (1974:97), கெல்னர் (Gellner) (1983:1), லொற்றர் (1962:930) ஆகியோரின் கருத்துக்களின் அடிப்படையில் தேசியவாதத்தின் அடிப்படையான பண்புகளில் இரண்டினை நாம் இனங்காணலாம். முதலாவது, பொது நலன்கள் அல்லது கடப்பாடுகளைத் தாண்டிய வலிமையான பற்றுடைமையை வேண்டிநிற்கும் ஒரு சமூகத்தின் உறுப்புரிமை, மற்றது, அரசியல் நலன்களுக்கான அச்சமூகத்தின் ஒழுங்கமைப்பு. ஒரு தனி ஆளைப் பொறுத்தவரை சமாந்தரமாக (ஒன்றை ஒன்று தழுவிய சமூகங்கள்) அல்லது வரிசையாக (ஒன்று இன்னொன்றை உள்ளடக்கியதாக) பல சமூகப் பற்றுகள் இருக்க முடியும். இலங்கையைப் பொறுத்தவரை முன்னதற்கு மொழி அடிப்படையாக தமிழும் மத அடிப்படையாக இஸ்லாமும் அமையும் முஸ்லிம் சமூகத்தை உதாரணமாகக் கொள்ளலாம். பின்னதற்கு சிங்களமும் பௌத்தமும் உதாரணமாக அமைகின்றது. ஆனால் சமூகப் பற்றுக்கள் தேசியவாதமாக உருமாற்றம் அடைவதற்கு அரசியல் ஒழுங்கமைப்பு ஒரு முன்தேவையாகும். இவ்வகையில் நாம் இலங்கை, சிங்கள, தமிழ்த் தேசியவாதங்கள் பற்றிப் பேசலாம். ஆனால், பௌத்த, இந்து, கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் தேசியவாதம் பற்றிப் பேச முடியாது. முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்களைப் போலன்றி, இலங்கைத் தமிழர்கள் (புலம் பெயர்ந்தோர் உட்பட) ஒரு சுயாதீனமான பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமுதாய அடிப்படையிலான அரசியல் குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் அநேகர் அந்தப் பிரதேசத்துக்குள் இல்லை எனினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குள் நகரும் விருப்பம் அற்றவர்கள் எனினும் நாம் இதனைக் காண்கின்றோம். பல சமூகப் பற்றுகள் காணப்படுவதுபோல் பலதேசிய வாதங்களும் இருக்க முடியும். உதாரணமாக, சிங்கள-தமிழ்த் தேசியவாதம் இலங்கைத் தேசியவாதத்தை முழுமைப்படுத்த முடியும். மேலும் சிங்கள தமிழ்த் தேசியவாதங்களுக்கிடையில் சில பிரச்சினைகள் தொடர்பாகப் பதட்டம் இருக்க முடியும் எனினும் இவை பெரும் மோதலாக வெடிக்கவேண்டிய அவசியம் இல்லை.

வெளிநாட்டு உதாரணங்கள் சிலவற்றை நோக்கலாம். ஐரிஷ் அமெரிக்கர்கள் ஐரிஷ் மற்றும் அமெரிக்கத் தேசியவாதங்கள் இரண்டுக்கும் (கடந்த கால, தற்போதைய தாயகங்கள்) தாம் உரியவர்கள் என்று கருதமுடியும். அவர்கள் அயர்லாந்துக்கு ஒருபோதும் போயிராதபோதும், இனிமேல் போகும் உத்தேசம் இல்லாதபோதும்கூட அவர்கள் அவ்வாறு உணரமுடியும். இதுபோல் இந்தியாவுக்குள் தமக்கென்று பிராந்திய தாயகங்களைக்கொண்ட இந்திய வங்காளிகளும், இந்திய குஜராத்திகளும் இந்திய மற்றும் குஜராத்திய தேசியவாதங்களுக்குத் தாம் உரியவர்கள் என்று உணரமுடியும். இதற்கு எதிர்மறையாக மலேசிய சீனர்களுக்கு மலேசியாவைத் தவிர வேறு தாயகம் இல்லை. ஆனால் அவர்கள் இனத்துவ அடிப்படையில் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப் பட்டிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்றதிலிருந்து மலேசியாவை ஆட்சிசெய்யும் மூன்று இனத்துவக் கூட்டமைப்பில் சீன உறுப்பாக இருப்பதன் மூலம் ஒருவகையான சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கிறார்கள். இவ்வகையில் நமது வரைவிலக்கணத்தின்படி மலேசிய, மலேசியச் சீனத் தேசியவாதங்கள் இரண்டுக்கும் உரியவராகின்றனர்.

அரசியல் நோக்கங்களுக்காக ஒரு சமூகம் ஒழுங்கமைப்புப் பெறுவதற்கு அச் சமூகத்தின் பெரும்பாலானவர்கள் அரசியல் ரீதியில் செயற்பாடு உடையவர்களாக மாறவேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை நாம் முதலாவதாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு மிகச் சிறுபான்மையினர் மட்டும் அவ்வாறு செயற்பாடு உடையவர்களாக இருக்கலாம். ஏனையோர் அதனுடன் இணங்கிப் போகலாம் அல்லது சம்பந்தப்படாது இருக்கலாம். சிலர் எதிரான அமைப்புகளிலும் ஈடுபாடு கொள்ளலாம். இரண்டாவதாக, அரசியல் நோக்கம் ஓரளவு சுயநிர்ணயம் அல்லது அரசியல் அதிகாரத்தை உள்ளடக்கும் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கலாம். ஆனால் இது சுயாட்சிப் பிராந்தியத்திலிருந்து (ஸ்கொத்லாந்து தேசியவாதம் அல்லது தமிழ்த் தேசியவாதம்) வேறு வகையான அரசியல் ரீதியான அதிகாரப் பகிர்வு வரை (உம்: மலேசியச் சீனர்) வேறுபடலாம். பலஸ்தீனம் போன்ற புறநடையான நிலைமைகளில் தன்னாதிக்கம் உடைய அரசாக இது அமையலாம். மூன்றாவதாக,



பலதேசியவாத நிலைமையைப் பொறுத்தவரை பற்றுதல்கள் சமமற்றதாக இருக்கலாம். இரட்டைப் பற்றுதல்கள் சில தேசியவாதங்களைப் பொறுத்தவரை துணையானதாகவும், சிலவற்றைப் பொறுத்தவரை ஒன்றுக்கொன்று எதிர்முரணானதாகவும் இருக்கலாம். தற்போது, அனேகமாக இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை முரண்பாடுகள்தான் ஆதிக்கமுடையதாக இருக்கின்றன. ஆனால் எப்போதும் இது இவ்வாறே இருக்கவில்லை. (இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பு தமிழ்த் தேசியவாதம் என ஒன்று இருக்கவில்லை.) தொடர்ந்தும் இது இவ்வாறே இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. (இலங்கை, சிங்கள மற்றும் தமிழ்த் தேசியவாதங்கள் காலப்போக்கில் இணைந்து வாழக் கற்றுக்கொள்ளக் கூடும்.) இந்தியாவில் மதத் தேசியவாதப் பிரச்சினைகள் அதிகம் உண்டு. ஆனால், மொழிவழித் தேசியவாதம் ஓரளவு சமாளிக்கப்பட்டுள்ளது எனத் தோன்றுகின்றது. இவ்வகையில் சௌத்திரியின் (1920) பின்வரும் முன்மொழிவு பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

> "சுதந்திரம் பெறும்போது மக்கள் பிரதேசப் பற்றின் பெறுமதியை உணர்வார்கள். .... அப்போது இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றிணைய முயலா, பதிலாக அவை ஒவ்வொன்றும் தமக்குள்ளே ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்தவே முயலும்.... இந்திய தேசப் பற்று அப்போது பிரதேசப் பற்றின் அடித்தளத்திலேயே கட்டி எழுப்பப்படும்."

தேசியவாதம் பற்றிய நமது வரைவிலக்கணம் ஓர் அரசியல் கூறையும் உள்ளடக்குவதனால், தேசம், அரசு ஆகியவற்றுக்கிடையே நாம் ஒரு வேறுபாட்டைக் காண வேண்டிய தேவை உள்ளது. ஒரு அரசுக்குள் பலதேசிய வாதங்கள் இருக்க முடிவதுபோல் தேசியவாதங்கள பல அரசுகளுக்குள் கால்பரப்பி இருக்க முடியும். சில பூகோள நிலைப்பட்டதாகவும் இருக்கலாம்.

"அரசுகள் ஒரு தேசிய இனம் இல்லாமல் இருக்கமுடியும். அல்லது தம் ஆட்சிக்குட்பட்ட பல தேசிய இனங்களைக் கொண்டதாக இருக்க முடியும். ஒரு தேசிய இனம் ஒரு அரசின் குடித்தொகையுடன் ஒரு எல்லையைப் பகிர்ந்து கொண்டிருக்கலாம். அல்லது ஒரு அரசுக்குள் இருக்கும் வேறு தேசிய இனங்களுடன் உள்ளடக்கப் பட்டிருக்கலாம், அல்லது பல அரசுகளுக்கிடையே பிரிக்கப்பட்டிருக்கலாம். தேசிய இனங்களுக்கு மிக மிக முந்திய அரசுகள் உள்ளன. இன்று இருக்கும் அநேக அரசுகளைவிட மிகப் பழைமையான சில தேசிய இனங்களும் உள்ளன. ஒவ்வொரு அரசும் ஒரு தேசம் அல்லது எல்லாத் தன்னாதிக்க அரசுகளும் தேசிய அரசுகள் என்ற நம்பிக்கை அரசியல் யதார்த்தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய நமது புரிதலை மிகவும் குழப்பியுள்ளது. ஓர் அரசு என்பது தன் குடிமக்களிடமிருந்து பணிதலையும் பற்றுதலையும் பெறும் அதிகாரத்தை உடைய சட்ட ரீதியானதும் அரசியல் ரீதியானதுமான ஒரு நிறுவனமாகும். ஒரு தேசம் அல்லது தேசிய இனம் என்பது தேசிய உணர்வு, ஒரு பொதுப் பண்பாடு, ஒரு ஒருமைப்பாட்டு உணர்வு என்பவற்றால் பிணைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சமூகமாகும்..." (Seton-Waston, 1977). இவ்வகையில், தேசியவாதத்தை நாம் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

> 'தேசியவாதம் என்பது, பற்றும், அர்ப்பணிப்பும் கோருகின்ற, வரலாறு, இனத்துவம், அடையாளம் காணக்கூடிய வாழ்புலம் என்பவற்றால் பிணைப்புண்ட, அரசியல் ரீதியாக ஒன்றிணைந்த ஒரு சமூகத்தின் வரித்துக்கொள்ளப்பட்ட உறுப்புரிமையாகும்.'

**தேசியவாதத்துக்கு முந்திய கட்டம்**

இலங்கைத் தமிழர்கள் இத்தீவின் ஆதிக் குடிகளுள் தாங்களும் அடங்குவதாக நம்புகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாடு கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளில் நாகநாடு/நாகதீவு என பரவலாக அறியப்பட்டது. இது தென்னாசியாவின் தென்பகுதியிலுள்ள மிகப் பழைய குடியிருப்பு இடங்களுள் ஒன்றாகும். இந்திரபாலா (1983:12) குறிப்பிடுவது போல:

> 1970ல் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு குழுவினரால் கந்தரோடையில் (சுன்னாகத்துக்குச் சமீபத்தில்) மேற்கொள்ளப்பட்ட ஓர் அகழ்வாய்வு கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளில் இங்கு வரலாற்றுக்கு முந்திய குடியிருப்புகள் இருந்ததை வெளிப்படுத்தியது. இப்பிரதேசத்தில் இருந்து எடுக்கப்பட்ட றேடியோ கார்பன் மாதிரிகள் கி.மு. 1200 முதல் கி.மு. முதல் நூற்றாண்டுவரை காலக் கணிப்புச் செய்யக் கூடியனவாக இருந்தன. ஆகவே இக்குடியிருப்புகளின் தோற்றம் கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டின் இறுதியாக இருக்க முடியும். கந்தரோடையிலிருந்து கிடைத்த தென் இந்திய இரும்புக் காலத்துக்குரிய கறுப்பு சிகப்பு மட்பாண்ட வகைகளும், சித்திர வேலைப்பாடமைந்த வேறுவகைப் பாண்டங்களும் வரலாற்றுக்கு முந்திய காலகட்டத்தில் இங்கு கணிசமான அளவில் குடியிருப்புகள் இருந்தமையைக் காட்டுகின்றன. 1970ல் நிகழ்ந்த அகழ்வுகள் இக்காலவரிசை இரும்புக் காலத்திலும் வரலாற்றின் ஆரம்ப கட்டத்திலும் தென்னிந்தியாவில் காணப்பட் காலவரிசையுடன் ஒத்துள்ளது (V.Begley). மட்பாண்ட மரபிலும் ஏனைய கலைப் பொருட்களிலும் காணப்பட்ட நெருங்கிய ஒற்றுமை



> தென்னிந்திய பொது மூலத்தையும், தொடர்ச்சியான வர்த்தக மற்றும் தொடர்பாடல் தொடர்புகள் இருந்தமையையும் காட்டுகின்றன. 1980ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆனைக்கோட்டையில் மேற்கொண்ட அகழ்வாராய்வும், அதைத் தொடர்ந்து 1981இலும் 1982 இலும் அதே பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பி.ரகுபதி, எஸ்.கே.சிற்றம்பலம் ஆகியோர் யாழ் குடாநாட்டில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகளும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தீவுகளிலும் வரலாற்றுக்கு முந்திய அநேக குடியிருப்புகள் இருந்தமைக்கு இதை ஒத்த சான்றுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தன.

கி.மு. முதல் ஆயிரம் ஆண்டின் பின் அரைவாசியில் தென் இந்தியாவுடனும் அதற்கு அப்பாலும் வர்த்தகத் தொடர்புகள் இருந்தமைக்கு சில இலக்கியச் சான்றுகளும் உள்ளன. போல் ஈ. பீரிஸ் (1917) குறிப்பிட்டுள்ளது போல இந்தியாவிலிருந்து முப்பது மைல் தூரத்திலேயே உள்ள ஒரு நாடு இலங்கை. இந்திய மீனவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் தமது மீன்பிடி தொழிலுக்கு செல்லும் பொழுது அவர்களால் பார்க்கக் கூடிய ஒரு நாடு. எனவே இத்தகைய நாட்டை அவர்கள் கடல் தொழில் கற்றுக் கொண்ட காலத்திலேயே கைப்பற்றி இருக்கலாம் என வாதிடப்பட்டது. விஜயன் இலங்கைக்கு வருவதற்கு மிக நீண்டகாலத்துக்கு முன்னரே இந்தியாவெங்கும் புகழ்பெற்ற, சிவனின் ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையில் இருந்தன. திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பன அவை.

சிங்களவர்களா, தமிழர்களா யார் முதலில் வந்தவர் என்ற சர்ச்சையில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையில் இது ஒரு பிரச்சினையே அல்ல. நூற்றாண்டுகளாக இனக்குழும அடையாளங்கள் மாறியுள்ளன. இரண்டு சமூகங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளாக இத்தீவில் ஒன்றாக வாழ்ந்துள்ளன. சங்க இலக்கியத்திலே (கி.பி.1, 2ம் நூற்றாண்டுகள்) இது ஈழம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தீவில் சங்ககாலத்துக்கு முன்பிருந்தே தமிழரும் (இந்து, பௌத்தம்) சிங்களவரும் (பௌத்தர்) பரஸ்பரம் தொடர்பு கொண்டு வாழ்ந்திருக்கின்றனர். உண்மையில் பத்மநாதன் (1999:2-3) குறிப்பிட்டுள்ளதுபோல "தொடக்க காலத்திலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை இந்நாட்டில் வாழ்ந்த ஒரு கணிசமான தமிழர்கள் பௌத்தர்களாவர்."

மகாவம்சத்திலும் பிற சிங்கள வரலாற்று நூல்களிலும் பதிவு செய்யப்பட்டு பல நூற்றாண்டுகளாக வாய்மொழி மரபாகவும் இலக்கிய மரபாகவும் சிங்களவர் மத்தியில் நிலைபெற்றுவிட துட்டகைமுனு பற்றிய கதை மரபு, இரண்டாயிரம் ஆண்டு கால தமிழ் இலக்கியம் எதிலுமோ, (தென் இந்திய, இலங்கைத்) தமிழ் நாட்டார் மரபிலோ இடம்பெறவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறிப்பிடத்தக்கது. (இலங்கை, இந்தியத்) தமிழர்கள் மத்தியில் இக்கதை மரபு இல்லாதிருப்பது இந்தப் பகைமைக்கு உண்மையில் ஒரு வரலாற்று அடித்தளம் இல்லை என்பதையே உணர்த்துகின்றது. ஆனால், வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட ஓர் அரசியல் கட்டமைப்பு என்பது தெளிவு. கிட்டத்தட்டத் தொடர்ச்சியான, தமிழ், சிங்கள மக்களின் நட்பு ரீதியான சக வாழ்வுக்குப் புறம்பாக, இந்த (மோதல் பற்றிய) கட்டுக் கதை மரபை சிங்கள அரசியல் தலைமை தொடர்ச்சியாகப் பேணிவந்ததுடன் காலத்துக்குக் காலம் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியும் வந்துள்ளது.

ஏனைய பிராந்தியங்களைப் போலவே இங்கும் உள்ளூர் அரச வம்சங்களுக்கிடையே நிலவிய பகைமை காரணமாக எண்ணற்ற யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. வெளியிலிருந்து வந்த ஆக்கிரமிப்புக் காரணமாகவும் யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றுள் பலவற்றைப் பொறுத்தவரை ஒருபுறத்தில் சிங்கள ஆட்சியாளரும் மறுபுறத்தில் தமிழ் ஆட்சியாளரும் இருந்துள்ளனர். ஆனால் இந்த மோதல்களின் அடிப்படைக் காரணி இனத்துவப் பகைமை அல்ல. காலனித்துவ காலகட்டத்தில் மத சகிப்புத்தன்மை இன்மை காணப்பட்டபோதிலும் இன சகிப்புத் தன்மை இன்மைக்கு சான்றுகள் எதுவும் இல்லை. சிங்கள, தமிழ் உறவு 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை பெரும்பாலும் பிரச்சினைக்குரியதாக இருக்கவில்லை. 1883 நிருவாக அறிக்கை "இலங்கையில் இன வெறுப்பு மிகச் சிறிதளவே காணப்படுகின்றது" எனக் குறிப்பிடுவதும் இங்கு மனங்கொள்ளத் தக்கது (ஹெல்மன் ராஜநாயகம், 1990:110). பத்மநாதன் (1999:1) குறிப்பிட்டிருப்பது போல்,

> "அண்மைக்கால இன முரண்பாட்டை தேசத்தின் வரலாற்று அனுபவத்தில் வேரூன்றிய நிகழ்வாக விளக்கும் போக்கு வரலாற்றியலில் ஐதீகங்களின் பட்டியலில் புதிய அம்சங்களைச் சேர்த்துள்ளது. மரபு ரீதியான வரலாற்றில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் பற்றிய விளக்கம் இந்நாட்டின் இன உறவு தொடர்ச்சியான இன மோதல்களாகவே இருந்து வந்திருக்கின்றது என்ற நம்பிக்கை உறுதிப்பட வழிவகுத்திருக்கின்றது. 19ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களின் எழுத்துகளில் இது நன்கு அறிமுகப்பட்ட ஒரு தொனிப்பொருளாகும்."

தமிழர் மத்தியில் சாதிரீதியான அல்லது வேறுவகையான பகைமைகள் இருந்தபோதிலும் (இது பெரும்பாலும் அகக் குழுமம் சார்பானது) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை பரவலான ஒரு



சிங்கள எதிர்ப்புணர்வு இருக்கவில்லை. உள்நாட்டு அரசியல் வளர்ச்சிப் போக்குக் காரணமாக இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்திலிருந்து படிப்படியாக இந்த எதிர்ப்பு முதிர்ச்சிபெற்று வந்திருக்கின்றது. பத்மநாதன் (1999:3-4) குறிப்பிடுவதுபோல, தமிழர்கள் குடியேறி வாழ்ந்த யாழ்ப்பாணம், அடங்காப்பற்று (வன்னி), திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு பிரதேசங்களுள் ஏதாவது ஒன்றுடன் இணைந்த பற்றுணர்வினால் தூண்டப்பட்ட ஒரு அம்சமாகவே தமிழ் வரலாற்று நூல்கள் (இவை அனைத்தும் 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பட்டவை) தமிழ் அடையாளத்தைக் குறிக்கின்றன.

இலங்கைத் தமிழர் மத்தியில் மேல்நாட்டு எதிர்ப்பு, கிறிஸ்தவ எதிர்ப்பு என்பன சிங்களவர் மத்தியில் அவை தோன்றுவதற்கு முன்னரே அதன் உச்ச நிலையை அடைந்தன (ஆறுமுகநாவலர் அநகாரிக தர்மபாலாவை விட ஒரு தலைமுறை மூத்தவர்) என்பதும் இங்கு கருத்தில் கொள்ளத் தக்கது. சாதிப் பெருமித உணர்வு நிலைத்திருந்தது எனினும், சிங்கள, பௌத்த அல்லது இஸ்லாமிய எதிர்ப்பின் சுவடுகள் எவையும் அதில் காணப்படவில்லை. அக்காலகட்டத்தில் அதற்குரிய ஆன்மீக அடித்தளமோ, அரசியல் காரணியோ இருக்கவில்லை என்பது இதற்குரிய காரணமாகலாம். இதற்கு எதிர்மாறாக தர்மபாலா தலைமை தாங்கிய இயக்கம் வெளிப்படையாகவே தமிழர்களுக்கும், இந்து, இஸ்லாமிய சமயங்களுக்கும் எதிர்ப்பானதாக அமைந்தது. இலங்கைத் தமிழர் சமூகம் மிகவும் தாராளவாதத் தன்மை கொண்டிருந்தது என்பது இதன் பொருளல்ல. அது பல அம்சங்களில் இன்னும் குறுகியதாக இருந்தது. ஆனால், அக்கால கட்டத்தில் அது சாதி, பிரதேசம் ஆகிய உட்பிரச்சினைகளிலேயே குவிமையம் கொண்டிருந்தது. இன்னும் ஒரு வேறுபாடும் உண்டு. நாவலரின் பிரசாரம் அவரது மரணத்தின் பின் மெல்ல மங்கி மறைந்தது. ஆனால் தர்மபாலா தொடங்கிய இயக்கம் பல வடிவங்களில் தொடர்ந்து இன்னும் வன்மையுடன் இருக்கின்றது.

சுதந்திர காலகட்டம் வரை இலங்கையின் சமூக, அரசியல் பிளவுகள் மொழி, மதம் என்பவற்றை அன்றி பெரிதும் சாதி, வர்க்கம் என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1912ல் சேர் பொன்னம்பலம் இராமநாதன் முதலாவது இலங்கையராக சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1917ல், பொன்னம்பலம் அருணாசலம் இலங்கை சீர்திருத்த லீக்குக்கு அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மீண்டும் 1919ல் அதன் பின்வந்த இலங்கைத் தேசிய காங்கிரசுக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1922ல் இனத்துவ அடிப்படையில் இதில் ஏற்பட்ட பிளவு அதிகாரப் பகிர்வு தொடர்பானதே அன்றி குடிமக்களிடையே ஏற்பட்ட பரஸ்பர எதிர்ப்புணர்வின் அடிப்படையிலோ அல்லது எந்த ஓர் இனக் குழுமத்தினதும் அந்நியமாதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வினாலோ ஏற்பட்டதல்ல. அக்காலகட்டத்தில் இனத்துவத் தேசியவாதத்தின் எழுச்சிக்கான சூழல் இருக்கவில்லை. இலங்கைத் தமிழர் மத்தியில் டொனமூர் கமிசனுக்கு முந்திய காலகட்டத்தில் இனத்துவப் பிரக்ஞை மேல் எழவில்ல. மக்கள் மத்தியில் இந்த உணர்வைக் கிளர்ந்தெழச் செய்யும் நிறுவனப் பொறிமுறைகள் (சிங்களவர் மத்தியில் இருந்த சங்கபோல்) இல்லாமை இதற்குக் காரணம் எனலாம். இலங்கைத் தமிழர்கள் சாதி அடிப்படையிலும் வேறு வகையிலும் கூறுபட்டிருந்ததும் தமிழ் இனத்துவ உணர்வின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பிறிதொரு காரணியாகும். 1930களின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் (யாஇகா) செல்வாக்கும் யாழ்ப்பாணத்தில் தமிழ் இனத்துவ உணர்ச்சி ஓர் அரசியல் சக்தியாக வளர்ச்சியடைவதைத் தாமதிக்கச் செய்தது எனலாம்.

## யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்

யாழ்ப்பாணம் இருபதாம் நூற்றாண்டு முழுவதிலும் இலங்கைத் தமிழ்ப் பிரக்ஞையின் மையமாக அடையாளம் காணப்படுகின்றது. அதேவேளை, அகில இலங்கை ரீதியான, காலத்தால் முந்திய, மிகத் தீவிரமான தேசியவாத இயக்கத்தையும் யாழ்ப்பாணமே தோற்றுவித்தது. முப்பதுகளில், உச்சத்தில் இருந்த யாஇகா, சாதி அமைப்புக்கு எதிராகவும், சமஷ்டி முறைக்கு எதிராகவும் (இதற்குக் காரணம் கூறப்படவில்லை. சிலவேளை இத்தேர்வு தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் இருந்திருக்கலாம்) பிரசாரம் செய்தது. ஐக்கிய இலங்கைக்கான விரைவான சுதந்திரத்தைக் கோரியது. டொனமூர் சீர்திருத்தங்களை அவை போதாது, காலம்தாழ்த்தி வந்தவை என்ற அடிப்படையில் நிராகரித்தது (கதிர்காமர், 1980). இதனுடைய கூட்டு காந்தி, நேரு ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசே தவிர தமிழ்நாட்டுத் திராவிட இயக்கம் அல்ல. இலங்கையில் இவர்களது நெருங்கிய சகாக்கள் கன்னங்கரா, குலரத்ன, மெத்தானந்தா முதலியோரை உள்ளடக்கிய தெற்கின் தீவிர தேசியவாதிகளும் மார்க்சியத் தலைவர்களுமே அன்றி, இலங்கைத் தேசிய காங்கிரசின் ஆங்கில மயப்பட்ட மிதவாதத் தலைவர்களோ, ஐக்கிய தேசியக் கட்சியோ அல்ல. யாஇகா இந்திய திராவிடக் குறுங்குழு வாதத்திலிருந்து முற்றிலும் விலகி இருந்தது மட்டுமன்றி, முப்பதுகளின் நடுப்பகுதியில் தமிழ்க் காங்கிரசைத் தோற்றுவித்தோரால் போஷிக்கப்பட்ட உள்ளூர்க் குறுங்குழு வாதத்திலிருந்தும் விலகி இருந்தது. இருபதுகளின் பிற்பகுதியிலும், முப்பதுகளின் தொடக்கத்திலும் நிலவிய சூழலில் யாழ்ப்பாணத்தில் யாஇகா ஆதிக்கம் பெற்றிருந்த போதிலும், முப்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து நாற்பதுகளின் இறுதிவரை யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்திய தமிழ்க் காங்கிரஸால் புறம் தள்ளப்படுவதை இதன் தலைவர்கள் யாராலுமே தவிர்க்க முடியவில்லை.



யாஇகா முன்உதாரணமும் ஒப்புமையும் இல்லாத வழமை மீறிய ஒரு தோற்றப்பாடாகும். பழைய தமிழ்த் தலைமைத்துவ உயர்குழாம் (அருணாசலம் 1924ல் இறந்தார், இராமநாதன் 1930வரை வாழ்ந்தார்) முன்னர் பிடித்திருந்த இடத்தை இது கைப்பற்றியது. இந்திய துணைக்கண்டத்தில் அரசியல் போக்கை மாற்றிக் கொண்டிருந்த காந்திய இயக்கத்தினால் தூண்டப்பட்டு, அகிம்சை, மதச்சார்ப்பின்மை, தேசியவாதம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகிய கருத்துநிலைகளை இது பிரதிபலித்தது. இதன் உறுப்பினர்கள் இளைஞர்கள், 25 வயதுக்குட்பட்ட பள்ளி ஆசிரியர்களும், 18, 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுமாவர். (இலங்கையில்) எல்லா மதங்களையும் சேர்ந்த இளைஞர்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்க எடுத்த முதல் முயற்சி இது எனலாம். (Ceylon Daily News, 2, Dec. 1924). யாஇகாவுக்குத் தலைமை தாங்கிய ஹன்டி பேரின்பநாயகம் ஓர் இளம் பட்டதாரி ஆசிரியர், காங்கிரஸின் முதலாவது ஆண்டுக் கூட்டத்தின்போது, (1924 டிசம்பர் 23-24) அவருக்கு வயது 25. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் செயற்பாட்டாளர் ஒருவரால் சுதந்திரத்தக்கு முற்பட்ட காலகட்டத்தில் எழுதப்பட்ட ஒரு நூலில் இருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பகுதி இலங்கை பற்றிய இவ் இயக்கத்தின் பார்வையையும் கருத்து நிலையையும் தெளிவாகக் காட்டுகின்றது.

> இலங்கை குறைந்தபட்சம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியான வரலாற்றைக் கொண்டுள்ளது. ஆயினும், இதன் வரலாற்று வளர்ச்சியை வளப்படுத்திய இரண்டு பிரதான மரபுகள் அதற்கும் முந்தியவை; இந்தியாவை அவற்றின் மூலமாகக் கொண்டவை. உண்மையில் இவை இரண்டுமே உலகின் கீழ்த் திசைப் பாதி எங்கிருந்து உந்துதல் பெற்றதோ, அதே மாபெரும் கலாசார நீர்த்தேக்கத்திலிருந்தே ஊட்டம் பெற்றவை. இவ்விரு மரபுகளில் ஒன்று உலகின் மாபெரும் புதல்வர்களுள் ஒருவரும் இந்தியாவின் மாபெரும் ஆன்மீக மேதையுமான சித்தார்த்த கௌதம புத்தரின் வழியில் பிறந்தது. மன்ற மரபு இதைவிடச் சற்றுப் பழமையானது. தென் இந்தியாவில் வளர்ந்த இந்துப் பண்பாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்துவது. இம்மரபுகள் ஒவ்வொன்றும் இலங்கையில் தனித்துவத்துடன் வளர்ச்சிபெற்றன. உண்மையில் பௌத்த மரபு இங்கேயே தத்துவத்திலும், நடைமுறையிலும் அதன் பூரணத்துவம் பெற்றது. பௌத்தம் அது பிறந்த நாட்டில் ஒரு தனிமதம் என்ற நிலையில் இருந்து மறைந்தபோது, சகல பௌத்த நாடுகளும் இலங்கையையே அம்மதத்தின் ஆன்மீகத் தாயகமாகக் கருதின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 15ஆம் நூற்றாண்டு, ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலம், சிங்கள இலக்கியத்தின் பொற்காலமாக அமைந்தது. இளவரசர்களும், மதகுருமாரும், விவசாயிகளும் இம் மறுமலர்ச்சிக்குப் பங்காற்றினர். ஆயினும், அழியாப் புகழுடைய காவிய நூலான காவ்யசேகரவின் ஆசிரியர் தொட்டகமுவே சிறி ராகுலவுக்கு இதில் முக்கிய இடம் உண்டு. இந்து மரபு, ஆரம்பகாலப் பௌத்தத்துடனும் ஆரம்பகால சிங்கள வரலாற்றுடனும் தொடர்பு கொண்டிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் தென் இந்தியாவைப்போல் இலங்கையிலும் அதன் தனித்துவமான வளர்ச்சி சைவசமயத்திலும் தமிழ் மொழியிலும் நிலைகொண்டிருந்தது. இந்த மொழி மிகப் பழமையான மொழிகளுள் ஒன்று. மனித குலத்தின் மிகப் பெரும் சாதனைகளுள் இடம்பெறும் ஓர் இலக்கியத் தொகுதியின் ஊடகமாகவும் இது அமைந்தது. பதினைந்தாம் நூற்றாண்டு இலங்கையில் சிங்களக் கவிதைக்கு மட்டுமன்றி தமிழ்க் கவிதையின் மிகச் சிறப்பான வளர்ச்சிக்கும் உரிய காலகட்டமாக அமைந்தது. இக் காலகட்டத்திலேயே அரச கேசரி அரிய இலக்கியப் படைப்பான ரகுவம்சத்தைத் தமிழில் மொழிபெயர்த்தார் (நேசையா, 1945:12).

> எதிர்காலத்தில் நாம் எதையும் சாதிக்க வேண்டுமானால் பெறுமதி மிக்க நமது முதுசொத்து பற்றிய பிரக்ஞையிலிருந்து பிறந்த மனத்திண்மை நமக்கு வேண்டும்... எல்லாச் சமூகத்தினருடனும் நல்லுறவுடன் வாழ்வதற்கான ஒரு மன உந்துதல் வேண்டும். சிங்களவரும் தமிழரும் முஸ்லிம்களும், பறங்கியரும் அருகருகே ஒருவரை ஒருவர் சகிப்புத்தன்மையுடன் அணுகி வாழ்வது இதைக் காட்டுகின்றது. உலகின் அநேக பகுதிகளில் இதற்கு ஒப்புமை காண முடியாது (நேசையா, 1945:6, 7).

யாஇகா தனது குடாநாட்டு அடித்தளத்தின் வரையறைகளைத் தாண்டுவதற்கு வெளி உலகுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றது. பின்வரும் தேசியத் தலைவர்கள் யாஇகாவுடன் தொடர்பு கொண்டிருந்தனர். டி.பி. தனபால (அதன் உருவாக்கத்தில் தொடர்பு கொண்டிருந்தவர்), பி.டி.எஸ். குலரத்ன (1925 வருடாந்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தலைவர்), சுவாமி விபுலாநந்தர் (1928 வருடாந்த கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்), ஜி.கே.டபிள்யூ. பெரேரா, ஏ.ஈ. குணசிங்கா, ஜோர்ஜ் ஈ.டி. சில்வா, ஈ. டபிள்யூ. பெரேரா (1929 வருடாந்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தலைவர்), பெரிசுந்தரம், டி.பி. ஜயதிலக்க, ரி.பி. ஜாயா, சி.ஈ.கொரியா, ஃபிரான்சிஸ் டி சொய்சா, எஸ்.டபிள்யூ. தசாநாயக்க,



எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தன, கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி குணவர்த்தன, எஸ்.ஏ.விக்கிரமசிங்க, டபிள்யூ. தஹாநாயக்க, ஜே.ஆர். ஜயவர்த்தன, டி.எஸ். சேனநாயக்க, செலினா பெரேரா (1941ஆம் ஆண்டு வருடாந்த கூட்டத்தில் இவர் ஆற்றிய உரை தொடர்பாக இவர் மீது அரச விரோதக் குற்றம் சுமத்தப்பட்டது). (கதிர்காமர், 1980). இப்பட்டியலில் அக்காலத்தில் மிகவும் பிரபலமான, மிகவும் செல்வாக்குள்ள தமிழ்த் தலைவரான இராமநாதனின் பெயர் இல்லாதிருப்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் யாஇகாவுக்கு சர்வசன வாக்குரிமை, சாதி அமைப்பு போன்ற முக்கிய விடயங்களில் அடிப்படையான தீவிர கருத்து முரண்பாடு இருந்தது.

யாஇகா தன் காந்திய ஆதர்சத்தை, காந்தியுடனும் அவரது நெருங்கிய சகாக்களுடனும் தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டதன் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டது. அதன் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் வந்து அதன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டவர்களுள் காந்தி, நேரு, ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி), சத்தியமூர்த்தி, கமலாதேவி, சட்டோபாத்தியாய, கல்யாணசுந்தர முதலியார் முதலியோர் அடங்குவர் (கதிர்காமர், 1980). முக்கியத்துவம் பெற்ற அன்றைய (ஈ.வே.ராமசாமி நாயக்கரின் சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி என்பவற்றால் தலைமை தாங்கப்பட்ட) தமிழ் நாட்டு திராவிட/பிரிவினவாத இயக்கத்தைச் சேர்ந்தோர் யாரும் அழைக்கப்படவில்லை என்பது யாஇகாவின் கருத்து நிலையை உணர்த்துகின்றது.

சுதந்திரத்துக்கு மிக முன்பிருந்தே கல்வியிலும் ஆட்சித் துறையிலும் தேசியமொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என யாஇகா பிரசாரம் செய்தது. யாஇகா செயற்பாட்டாளர் ஒருவர் கல்வியில் தாய்மொழி (நேசையா, 1945) என்ற நூலை எழுதினார். இடைநிலைக் கல்வியில் சிங்களத்தைக் கட்டாய மொழியாகக் கற்பிப்பதில் கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்தின் எல்லா முன்னணிப் பாடசாலைகளையும் ஈடுபடுத்துவதில் யாஇகா வெற்றி பெற்றது. ஜே.ஈ. ஜயசூரிய குறிப்பிட்டுள்ளதுபோல "சிங்களவர் சிங்களம் இல்லாமல் சமாளிக்கத் தயாராக இருந்த ஒரு காலகட்டத்தில், சிங்களத்துக்கும் தமிழுக்குமான போராட்டம் தமிழ்த் தலைவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது" (நேசையா, 1981:152). சிங்களம் மட்டும் ஆட்சிமொழிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு எதிர்வினையாக யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பது 1956ல் இடைநிறுத்தப்பட்டது ஒரு முரண்நகையாகும்.

யாஇகாவிடமிருந்து இலங்கைத் தமிழரின் அரசியல் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிய தமிழ்க் காங்கிரஸ், யாஇகாவின் தேசிய மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கவோ முன் எடுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவோ இல்லை. இலங்கைத் தேசிய காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றைப் போலவே தமிழ்க் காங்கிரசும் பெரிய பாடசாலைகளில் ஆங்கிலமே கல்வி மொழியாக நீடிப்பதிலும், ஆட்சி மொழியாக இருப்பதிலும் திருப்தி அடைந்தது. தேசிய தலைமைத்துவத்துக்குச் சவாலாக சிங்கள கிளர்ச்சிவாதத் தலைமைத்துவம் எழுச்சிபெற்றபோது அது சிங்களம் மட்டும் என்ற கொள்கையின் பக்கம் நின்றது. சிலவேளை தமிழ்த் தலைமைத்துவம் தனது முன்னைய தேசிய மொழிக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்திருந்தால், சிங்கள-தமிழ் இருமொழிக் கொள்கைக்குச் சார்பான ஒரு தீவிரவாத பல்இனக் கூட்டினால் இச்சவால் முறியடிக்கப்பட்டிருக்கலாம். ஐம்பதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பித்த சமூக, பண்பாட்டு, அரசியல் மாற்றம் பிரிவினைக்குப் பதிலாக ஒற்றுமைப்படுத்துவதாகவும் இருமொழிச் சமூகத்தினருக்கும் நன்மையானதாகவும் தமிழ்ப் பேசுவோரை அந்நியப்படுத்தி சிங்களம் பேசுவோருக்கு மட்டும் சாதகமானதாகவும் அமைந்திராது.

"பகிஷ்கரிப்புத் தீர்மானம்" உறுதிப்படுத்தியது போல யாஇகாவின் இலட்சியவாதம் அரசியல் திறனுடன் இணைந்ததாக இருக்கவில்லை. (1931ல்) சர்வசன வாக்குரிமை அடிப்படையில் நடைபெற இருந்த முதலாவது பொதுத் தேர்தலை (யாஇகா இதற்கு முற்றிலும் ஆதரவானது), டொனமூர் சீர்திருத்தங்கள் இலங்கைக்குப் பூரண சுயராஜ்யம் வழங்கவில்ல என்ற அடிப்படையில் பகிஷ்கரிக்க எடுத்த தீர்மானம் யாஇகாவின் தூய இலட்சிய வாதத்தையும், அரசியல் சாதுரியம் இன்மையையுமே காட்டியது. பல முக்கிய பிரமுகர்கள் இந்த ஒருதலைப் பட்சமான முடிவு பற்றி அதிருப்தியுற்றதால் இப்பிரச்சினை காரணமாக தலைமைத்துவம் பிளவுண்டது. அவர்களுடைய கருத்துடன் நேருவும் உடன்பட்டார் (நேசையா, 1983:xxii). கொழும்பில் இருந்த தேசியத் தலைமைத்துவமும் பிளவுண்டது. பல முக்கிய பிரமுகர்கள் (ஃபிரன்சிஸ் டி. சொய்சா, ஈ. டபிள்யூ. பெரேரா, டி.பி. ஜாயா, பிலிப் குணவர்த்தனா, சி.ஈ. கொரியாவும் பின்னர் பீட்டர் கெனமனும் உட்பட) பகிஷ்கரிப்புக்குத் தம் பூரண ஆதரவைத் தெரிவித்தனர். ஆனால் அவர்களால் இப்பிரச்சினை தொடர்பாக தெற்கில் ஒரு கருத்தொருமைப்பாட்டைை ஏற்படுத்த முடியவில்லை (கதிர்காமர், 1980).

பகிஷ்கரிப்பு யாழ்ப்பாணத்துக்குள் மட்டுமே சாத்தியமாயிற்று. யாஇகா யாழ்ப்பாணத்தில் தனது அரசியல் தளத்தைக் காப்பாற்றும் வாய்ப்பை இழந்துவிட்டது. பகிஷ்கரிப்பு யாழ்ப்பாணத்தில் தாக்கமாக இருந்த அதேவேளை, யாழ்ப்பாணத்தில் யாஇகாவுக்கு எதிரானவர்கள் (குறிப்பாக ஜி.ஜி. பொன்னம்பலம்) வன்னிக்கும் வேறு இடங்களுக்கும் சென்றனர். பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் யாஇகாவைத் தாண்டி தேசிய அரசியலில் நுழையும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைத்தது.



யாஇகா இன்னும் ஒரு தசாப்தம் இயங்கியபோதிலும் பகிஷ்கரிப்பு அதைப் பொறுத்த வரை ஒரு முக்கியமான திருப்பமாகவும், இந்த தனித்துவமான இளைஞர் இயக்கத்தின் முடிவின் தொடக்கமாகவும் அமைந்தது. காலப்போக்கில் வேறு இளைஞர் இயக்கங்கள் (குறிப்பாக ஜே.வி.பி., எல்.ரி.ரி.ஈ) தேசிய அரசியலில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியபோதிலும் அவை பெரும்பாலும் ஜனநாயகச் சட்டகத்துக்குப் புறம்பானவையாகும்.

## தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சி

சுதந்திரம் கிடைக்கும் வரை தமிழ்த் தலைமைத்துவம் ஏகமனதாக, விட்டுக்கொடுப்பின்றி இலங்கையில் ஒற்றை ஆட்சி முறைக்கே ஆதரவாக இருந்தது. யாஇகாவை புறமொதுக்கி, தமிழ்ப் பிரக்ஞையை ஊக்குவித்த தமிழ்க் காங்கிரஸ்கூட கூட்டாட்சிக்குச் சாதகமாக இருக்கவில்லை. சிலவேளை அவர்கள் தொலைநோக்கு அற்றவர்களாக இருந்திருக்கலாம். கூட்டாட்சி முறை தங்கள் தொழில் வாய்ப்புகளை மட்டுப்படுத்துவதாக அமையக்கூடும் என்ற அச்சத்திலேயே அவர்கள் அவ்வாறு செயற்பட்டிருக்கலாம். கூட்டாட்சி என்ற கருத்தாக்கம் சுதந்திரத்துக்குப் பின்னரே தமிழ் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், யாழ்ப்பாணத்தில் கூட 1952 பொதுத் தேர்தலில் அது முற்றாக நிராகரிக்கப்பட்டது. 1956ன் சிங்களம் மட்டும் இயக்கத்தின் விளைவாகத்தான் இலங்கைத் தமிழ் மக்கள் சமஷ்டி முறையைத் தேர்ந்துகொண்டனர். காலப்போக்கில், தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி வைத்திருந்த சாதி மற்றும் ஏனைய தடைகளைத் தாண்டி (அரசியல் துறையில்) அரசியல் காரணிகள் படிப்படியாக வெற்றி பெற்றன. இறுதியாக இந்தத் தேசியவாதம் ஒரு பிரிவினைவாதக் கூறையையும் தேடிக்கொண்டது. ஆயினும், இக்கூறு 1970களின் நடுப்பகுதிவரை ஓர் ஓரக் கூறாகவே இருந்துவந்தது. பிரிவினையை ஆதரித்த ஒவ்வொரு வேட்பாளரும் ஒவ்வொரு பாராளுமன்றத் தேர்தலிலும் மிக மோசமாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

1971ல் தொடங்கிய பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தல், 1972ன் அரசியல் யாப்பு வரைவு ஆகியவை ஏற்படுத்திய மன வடுக்களின் பின்புகூட 1972ன் அரசியல் யாப்பு வரைவை நிராகரித்து அகில இலங்கைத் தமிழ் மாநாடு (யாழ்ப்பாண சமூகத் தலைவர்களின் குழுவொன்று இதனைக் கூட்டியது. ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமை தாங்கிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அல்ல) வெளியிட்ட தீர்மானத்தின் கடைசிப் பந்திகளில் இலங்கை 'நமது தாய்நாடு' என்றும் அதன் குடிமக்கள் 'ஒரே மக்கள், என்றும் குறிப்பிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல் யாப்பு பற்றிய தனது நூலில் க்ரான்வில் ஆஸ்ரின் "அரசியல் யாப்பின் வெற்றி" யின் ரகசியம் பற்றிக் குறிப்பிடுகையில், இந்திய அரசியல் அமைப்பின் மூலவர்கள் அரசியல் யாப்பு மன்றத்தை முதலில் இந்தியாவின் சகல சிறுபான்மை இனத்தவரும் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வகையில் மாற்றியமைத்தனர். பின்னர் கருத்தொருமை, உள்ளடக்குதல் ஆகிய இந்தியாவுக்குச் சிறப்பான எண்ணக்கருக்களை தாக்கமான முறையில் பிரயோகித்தனர்.

இலங்கையராகிய நாம்கூட அதே மதிப்பீடுகளை உடையவர்கள்தாம். இலங்கை தனக்கு உண்மையாக இருக்க வேண்டுமானால், அதன் அரசியல் யாப்பை வரைவதற்குப் பொறுப்பாளிகளாக்கப்பட்டவர்கள், அந்த யாப்பை வரையும் அணுகுமுறையிலும், அதில் எவற்றை உள்ளடக்குவது என்பதிலும் எமது பாரம்பரியத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். இலங்கை எமது தாய்நாடு, நாம் எல்லாரும் ஒரே மக்கள், நாம் இரு சிறந்த மொழிகளை ஒரே குரலில் பேசுகிறோம், நீண்டகாலத்துக்கு முன்பு நமது தந்தையர் உருவாக்கிய இந்த யாப்பு நீண்ட காலத்துக்கு தேசத்தின் சாசனமாக நீடிக்க வேண்டும் என்று எமது பிள்ளைகளும் ஒரே குரலில் பேசக்கூடியதாக இருக்க வேண்டும்.(நேசையா 1981: 152)

இத்தீர்மானத்தின் மொழி இலங்கைக்குரிய அர்த்தத்தில் குறிப்பிடத்தக்க அளவு தேசியத் தன்மை கொண்டிருந்தது; பிரிவினைவாத உணர்வுகள் அற்று இருந்தது. சுருங்கிக் கொண்டிருந்த, அதேவேளை அக்காலத்திய தமிழ்த் தேசியவாதத்தின் முக்கியமான அம்சத்தை அதாவது இலங்கைத் தேசியவாதத்துக்குள் அடங்கிய துணைத் தேசியவாதமாக அமைந்த தன்மையைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. இந்தத் தீர்மானம் ஒருவகையில் வடக்கு அரசியலில் இருந்து எப்போதோ மறைந்துபோன யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் கடைசியாக அடையாளங் காணக்கூடிய சுவடாக அமைந்தது. இன்று, கடந்த ஐந்து தசாப்தங்களின் அரசியல் அபிவிருத்தியின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, மேல் குறிப்பிட்ட தீர்மானம் யதார்த்தத்தோடு தொடர்பில்லாத அனுபவமற்ற இளைஞரின் இலட்சியவாதமாகவே தோன்றக் கூடும். உண்மையில், தமிழர்களுக்கு எதிரான தொடர்ச்சியான கலவரங்கள், இன அழிப்பு, வடகிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களை பாதுகாப்புச் சோதனை என்ற போர்வையில் தொடர்ச்சியாக தொல்லைகளுக்கு உட்படுத்துவது போன்ற நடவடிக்கைகள், புலம் பெயர்ந்த அல்லது தொல்லைகளுக்கு உள்ளாக்கப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு பாதுகாப்பான சொர்க்கமாக அமையக்கூடிய தமிழர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஒரு சுயாட்சிப் பிரதேசத்தின் தேவையை உறுதிப்படுத்துவதாகவே



நோக்கப்படுகின்றன. வட, கிழக்கில் உள்ள தமிழர்கள் இதைவிடத் தொல்லைகளை அனுபவிக்கின்றனர். ஆனால் தாக்கமான அதிகாரப் பகிர்வின் மூலம் இதற்குத் தீர்வுகாண முடியும்.

1940கள் முதல் 80கள் வரை வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் இனத்துவ, மற்றும் அரசியல் அம்சங்களில் காணப்படும் மாற்றங்கள் இதற்கு அடியிலுள்ள அரசியல் அபிவிருத்திகளையே வெளிப்படுத்துகின்றன. கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு இதில் காணப்படும் ஒரு தொடர்ச்சியான போக்காகும். சமஷ்டிக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் (தமிழ், முஸ்லிம் இருசாராரும்) ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மாறுவது 60களில் காணப்பட்ட ஒரு போக்காகும். 90களில் காணப்பட்ட முக்கியமான போக்கு கிழக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் எழுச்சியும், வடக்கிலும் கிழக்கிலும் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி இரண்டுக்கும் முஸ்லிம், தமிழ் ஆதரவின் வீழ்ச்சியுமாகும்.

ஆரம்ப கட்டத்தில் (50, 60களில்) இலங்கைத் தமிழர்கள் (இ.த) மலையகத் தமிழர்கள் (ம.த), முஸ்லிம்கள் ஆகிய எல்லாரையும் உள்ளடக்கிய தமிழ் பேசும் மக்களின் (தபேம) தேசியவாதம் ஒன்றினை வளர்த்தெடுக்கும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இது ஒரு வகையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினதும், குறிப்பாக சமஷ்டிக் கட்சிக்குள் இருந்த சில தலைவர்களினதும் ஓர் இலட்சிய நோக்காகவும், இன்னும் ஒரு வகையில் வட கிழக்குக்குள் தேர்தல் லாபம் பெறும் ஒரு முயற்சியாகவும் அமைந்தது. இந்தக் கருத்துநிலையின் அடிப்படையில் திருகோணமலை வடகிழக்குப் பிராந்தியத்தின் தலைநகராகக் கருதப்பட்டதுடன், சில கிழக்கு மாகாண தமிழ் முஸ்லிம் தலைவர்களும், ஏற்கனவே சமஷ்டிக் கட்சியின் தலைமைத்துவத்துக்குள் ஆதிக்கம் செலுத்திய கொழும்பு/யாழ்ப்பாணத் தமிழர்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும், மலையகத் தமிழர் உட்பட தமிழ்ப் பேசும் மக்களின் சகல பிரிவினர்களின் நலன்களையும் உள்ளடக்கும் வகையில் கொள்கைகள் விரிவுபடுத்தப்பட்டன. ஆயினும், யாழ்ப்பாண மேலாதிக்கம் பற்றிய வரலாற்று ரீதியான ஐயமும், எதிர்ப்பும் இலகுவில் அழிக்கக்கூடியதாக இருக்கவில்லை.

சமஷ்டிக் கட்சி (பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) இலங்கைத் தமிழ்ச் சமுகத்தின் வெவ்வேறு பிரிவுகளையும் படிப்படியாக ஒன்றிணைப்பதில் ஓரளவு முன்னேற்றம் கண்டபோதிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் எனப் பிரித்த இனத்துவ எல்லைகளை வெற்றிகரமாக அதனால் அழித்துவிட முடியவில்லை. தேர்தல் மட்டத்தில் சமஷ்டிக் கட்சி வேட்பாளர்கள் சிலர் தமிழ் முஸ்லிம் வாக்குகளால் வெற்றிபெற்ற போதிலும், வெற்றிபெற்ற முஸ்லிம் உறுப்பினர்கள், மைய அரசியலில் ஓரம் கட்டப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் ஆதிக்கத்துக்குட்பட்ட எதிர்க்கட்சிக்குள் தாம் சாதகமற்ற நிலையில் இருப்பதாக உணர்ந்தனர். இந்நிலை அவர்களைப் பொறுத்தவரை ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பெறும் வழியை அடைத்ததோடு, பிராந்திய மட்டத்தில் செல்வாக்கான அரசியல் தலைமைத்துவத்தைப் பெறும் வாய்ப்பையும் தடுத்தது. உண்மையில் இத்தகைய சிந்தனையை கிழக்கு மாகாணத்தையும் வன்னி மாவட்டங்களையும் சேர்ந்த சில தமிழ்த் தலைவர்களும் கொண்டிருந்தனர். அவர்களுட் சிலர் சமஷ்டிக் கட்சி ஆதரவில் தேர்தலில் வெற்றிபெற்றபின், கிழக்கு மாகாண முஸ்லிம் உறுப்பினர்களுடன் சேர்ந்து கட்சிமாறி ஆளும் கட்சியில் சேர்ந்தனர்.

தமிழ்ப் பேசும் மக்கள் சார்ந்த பரந்த தேசியவாதம் ஒன்றை முன்னெடுப்பதற்கான அரசியல் முயற்சி வெற்றிபெறாத போதிலும், தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் நலன்களைக் குவிமையப்படுத்தியதன் மூலம் வடகிழக்குப் பிராந்தியம் முழுவதிலும் அரசியல் பிரக்ஞையை தூண்டுவதற்கு அது உதவிபுரிந்துள்ளது எனலாம். இதன் தர்க்க ரீதியான விளைவாக, கிழக்கு மாகாணத்தைப் பலமான அடித்தளமாகக் கொண்ட ஒரு முஸ்லிம் அரசியல் கட்சி (சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்) தோற்றம் பெற்றது. சிலவேளை, 'தோல்வியுற்ற தமிழ்ப் பேசும் மக்கள்' என்ற கண்ணோட்டத்துக்குப் பதிலாக, கிழக்கில் ஒரு வலுவான தனித்துவத்தைக் கொண்ட ஒரு முஸ்லிம் கட்சியுடன், ஒன்று அல்லது இரண்டு தமிழ்க் கட்சிகள் கூட்டிணைந்து செயற்படுவதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது தமிழ், முஸ்லிம் நலன்களைப் பேணுவதற்கு இன்னும் வாய்ப்பானதாக இருந்திருக்கக் கூடும். முஸ்லிம்களின் நோக்கு நிலையிலிருந்து பார்க்கும்போது கிழக்கில் அடித்தளத்தைக் கொண்ட ஓர் அரசியல் கட்சியின் தோற்றம் ஒரு இரண்டகத் தன்மையை ஏற்படுத்தியது. இதுவரை புறக்கணிக்கப்பட்ட வட, கிழக்கு முஸ்லிம்களின் நலன்களை அடைவதற்கு (அவற்றுட் சில இப்பிராந்தியத்துத் தமிழர்களின் நலன்களை ஒத்தவை) ஏனைய பிரதேச முஸ்லிம்களை மோசமாகப் பாதிக்காதவாறு தாக்கமான முறையில் செயற்படுவது எவ்வாறு என்பதே இந்த இரண்டகத் தன்மையாகும். இன்னும் ஒரு பிரச்சினை, வட கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் அபிலாசைகளுக்கிடையே ஒருமைப்பாடு காண்பதாகும். இந்த இரண்டகத் தன்மைகள் தீர்வு காணப்பட வேண்டியவையாகும்.



"ஒரு பெரிய அரசியல் அலகுக்குள் இருந்து ஒரு புதிய சுயாதிக்கமுடைய அரசியல் அலகை உருவாக்கும் திட்டமிட்ட முயற்சியே பிரிவினை வாதமாகும்" என்ற கே.எம்.டி சில்வாவின் (1998: 148) வரைவிலக்கணம் தமிழ்ப் பிரிவினைவாதம் 1948-53 காலப்பகுதியில் தோன்றியது என்ற அவரது நிலைப்பாட்டுடன் தெளிவாகவே முரண்படுகின்றது. 1930களில் தமிழ்க் காங்கிரசுடன் மேற்கிளம்பிய இலங்கைத் தமிழ் குறுங்குழுவாதம் (sectarianism) அல்லது இனவாதம் மிகக் குறுகியதாகவும், கருத்துநிலைரீதியாக மிகத் தொடக்க நிலை சார்ந்ததாகவும் (50க்கு 50 என்ற திட்டம் போன்றவை) இருந்ததே தவிர பிரிவினைவாதம் சார்ந்ததல்ல. சமஷ்டிக் கட்சி கூட தமிழ்த் தேசியவாதக் கட்சியே தவிர பிரிவினைவாதக் கட்சியாக இருக்கவில்லை. மார்க்சிய சார்பற்ற கட்சிகளும் பின்னர் மார்க்சியக் கட்சிகளும் படிப்படியாகச் சிங்களம் மட்டும் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின்னரும் கூட 1970களின் நடுப்பகுதிவரை தமிழ்ப் பிரிவினைவாதத்துக்கு தேர்தல் ரீதியான ஆதரவு கிடைக்கவில்லை. 1970ல் கூட முன்னாள் சமஷ்டிக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் பிரிவினைவாதத்துக்கு ஆதரவாகக் குரல்கொடுத்தபோது, அவரை எதிர்த்து சமஷ்டிக் கட்சி கே.பி. இரத்தினத்தை தேர்தலில் நிறுத்தியது. நவரத்தினம் பிரிவினைக்கு ஆதரவராகத் தீவிரமாகப் பிரசாரம் செய்தார். இரத்தினம் சமஷ்டிக்குச் சார்பாகப் பிரசாரம் செய்து அமோக வெற்றியீட்டினார். 1975 பிப்ரவரியில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசந்துறைத் தொகுதியில் இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் விடுத்த அறிக்கை ஒரு துர்ப்பாக்கியமான திருப்புமுனையை அடையாளப்படுத்தியது.

> "கடந்த 25 ஆண்டுகளாக ஐக்கிய இலங்கையில் சிங்களவரோடு சம உரிமையின் அடிப்படையில் எமது அரசியல் உரிமைகளைக் காப்பாற்ற நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம்... அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் சுதந்திரத்தின் மூலம் கிடைத்த தமது அதிகாரத்தை எமது அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கும் ஆளப்படும் மக்களாக எமது நிலையைத் தாழ்த்துவதற்குமே பயன்படுத்தின என்பது வருத்தத்துக்குரியது... இத்தேர்தலில் கிடைத்த தீர்ப்பை, தமிழ் ஈழ தேசம் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே உரித்துடைய இறைமையை நடைமுறைப்படுத்தவும் சுதந்திரமடையவும் வழங்கப்பட்ட ஆணையாகவே கருதுகிறேன் என்பதை எனது மக்களுக்கும் நாட்டுக்கும் நான் அறிவிக்க விரும்புகிறேன்."

1972ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட யாப்பு, பல்கலைக்கழகப் பிரவேசம் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் திட்டம் உட்பட அநேக துர்ப்பாக்கியமான பின்னடைவுகளின் பின்னணியிலேயே இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கையும், 1976ல் பிரிவினைக்கு ஆதரவாக நிறைவேற்றப்பட வட்டுக்கோட்டைத் தீர்மானமும் நோக்கப்பட வேண்டும். 1971ல் தரப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் பல்கலைக கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தலை அரசியல் ரீதியில் ஒரு நிர்ப்பந்த நடவடிக்கையாகவே அநேக சிங்களத் தலைவர்கள் நோக்கி இருக்கக் கூடும். ஆனால் இலங்கைத் தமிழ் சமூகத்தின் மீது அது ஏற்படுத்தக் கூடிய மனவடுவைப் பற்றி அவர்கள் உணரத் தவறிவிட்டனர்; அல்லது பாராமுகமாய் இருந்தனர். மறுபுறமாக பல்கலைக் கழக அனுமதியில் அதிகரித்துக் கொண்டிருந்த இனத்துவ அடிப்படையிலான சமமின்மை சிங்கள அரசியல் தலைவர்கள் மீது ஏற்படுத்திய அரசியல் அழுத்தத்தைத் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை; அல்லது பாராமுகமாய் இருந்தனர். வெவ்வேறு இனக்குழுமங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களுக்கிடையில் இப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்திருப்பின் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வுக்கு அது வழிகோலி இருக்கக் கூடும். ஆனால், இத்தகைய உரையாடல் இலங்கை அரசியல் மரபில் ஒரு பகுதியாக இருக்கவில்லை. இதுபோலவே 1972ல் வரையப்பட்ட அரசியல் யாப்பும், சிறுபான்மையினரின் நலன்கள் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாத சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே சிறுபான்மையினரால், குறிப்பாக இலங்கைத் தமிழர்களால் நோக்கப்பட்டது.

அரசியல் யாப்பை வரைகையில் தங்கள் நோக்குகளை உள்ளடக்கவோ, அல்லது அவற்றைக் கருத்தில் கொள்ளவோ எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படாத புறக்கணிப்புக் காரணமாக தமிழ்த் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்ட அந்நியமாதல் (அதன் விளைவாக தமிழ் மக்களின் அந்நியமாதல்) 1976ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் தோற்றத்துக்கு வழிவகுத்த ஓர் பிரதான காரணியாகும். அந்தக் கட்டத்தில்கூட, தீர்மானத்துக்காக வாக்களித்த அநேகரும் அல்லது அதை வெளிப்படையாக எதிர்ப்பதைத் தவிர்த்துக் கொண்டவர்களும் அதை அடக்குமுறைக்கு எதிரான ஓர் அடையாள எதிர்ப்பாக அல்லது பேரம் பேசுவதற்கான ஒரு தந்திரோபாயமாகப் பார்த்தனரே அன்றி, அவர்களின் உண்மையான அபிலாசைகளின் வெளிப்பாடாகப் பார்க்கவில்லை என்றே தோன்றுகின்றது. ஆனால், அந்தத் தீர்மானத்தின் செல்வாக்கை அவர்கள் சரியாகக் கணிக்கவில்லை. ஒரு புறத்தில், அந்த மாநாட்டில் கலந்துகொண்ட இளைஞர்கள் அதனைத் தீவிரமாகக் கருத்தில்கொண்டு பிரிவினைக்கான போராட்டத்தைத் தொடங்கினர். ஒரு தசாப்த காலத்துக்குள் அது ஓர் உள்நாட்டு யுத்தமாக விருத்தியடைந்தது. மறுபுறத்தில் 1977, 1979, 1981 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு



எதிரான வன்முறைகளையும் 1983ல் நாடு தழுவிய இன அழிப்பையும் ஒழுங்குபடுத்திய சிங்களத் தலைவர்களுக்கு பெருமதிமிக்க வெடிமருந்துகளை அது வழங்கியது.

## தமிழ்த் தேசியவாதத்தின் நெருக்கடி

1983ல் நடைபெற்ற இன அழிப்பில் ஆளும் கட்சியின் ஒரு பிரிவினர் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது வெளிப்படை. இந்த இன அழிப்பு முயற்சியைத் தொடர்ந்து, பிரிவினைக்கு எதிரான பிரகடனத்தைச் செய்ய மறுத்தமைக்காக தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதுடன் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. இது இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக நடைமுறையில் ஒரு பாரிய விரிசலை ஏற்படுத்தியது. தவிர்க்கமுடியாமல், பாரளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் இன்மையினால் ஏற்பட்ட இடைவெளியை தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் நிரப்பின. இந்நிலை இன்னும் மாற்றமடையாமலே இருக்கின்றது. இதனால் வடக்கிலும், கிழக்கின் சில பகுதிகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் இன்னும் வாக்குரிமை பறிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர். அதாவது அவர்களுள் அனேகர் பாராளுமன்றப் பிரதிநிதியைத் தெரிவு செய்வதில் எவ்வித பங்குமற்று இருக்கின்றனர். மேலும், எல்லாத் தமிழர்களும் - இடம்பெயர்ந்தவர்களும் பெயராதவர்களும் - தொடரும் யுத்தத்தின் நிழலிலேயே வாழ்கின்றனர். இது அவர்களின் அரசியல் உரிமையையும் ஏனைய உரிமைகளையும் மோசமாகப் பாதித்துள்ளது.

தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியில் ஒரு பிரதான காரணி இடப்பெயர்ச்சியாகும். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுட் பலர் பல தடவைகள் இடம்பெயர நேர்ந்துள்ளது. இவர்களுள் அரைவாசிக்கும் அதிகமானோர் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தோராகவே உள்ளனர். யுத்தம் நீடிக்கும்வரை இடப்பெயர்வும் நீடிக்கும். பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கடல்கடந்த பல நாடுகளில் சிதறியுள்ளனர். அவர்களுள் அநேகர் இனமுரண்பாடு தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் இதில் அடங்குவர். முன்னவர்கள் செயல்வலு உடையவர்களாகவும், புலிகளுக்கு நிதி சேகரித்தல், பிரசாரம் செய்தல், ஆதரவு இயக்கங்களை நடத்துதல் போன்றவற்றில் முக்கிய சக்தியாகவும் உள்ளனர். பிறிதொரு பெரும் பகுதியினர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக வடகிழக்கில் மோசமான சூழலில் வாழ்கின்றனர். மேலும் அடிக்கடி இராணுவத்தினாலோ புலிகளாலோ அல்லது வேறு ஆயுதக் குழுக்களாலோ ஏதோ ஒரு வகையில் துன்புறுத்தலுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாகின்றனர். இப்பிரிவினரே புலிகளுக்கும் ஏனைய ஆயுதக்குழுக்களுக்கும் (சிறிய அளவில்) ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றனர். மூன்றாவது பெரும் பிரிவினர் இலங்கைக்குள் வட கிழக்குத் தவிர்ந்த பிற பகுதியில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் அடிக்கடி பொலிஸ் அல்லது இராணுவத்தினால் துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர். தவிரவும் வீடு, தொழில், நடமாட்ட சுதந்திரம் என்பன தொடர்பாகப் பல்வேறு வகையான பாராபட்சத்துக்கு உட்படுகின்றனர்.

குடியிருப்பு தொடர்பான பாராபட்சம் கொழும்பிலும் அதன் சுற்றாடலிலும் இனக்குழும அடிப்படையிலான வாடகை வீட்டுச் சந்தை ஒன்றைத் தோற்றுவித்துள்ளது. அநேக வீட்டுடைமையாளர்கள் தமிழர்களுக்குத் தங்கள் வீடுகளை வாடகைக்குக் கொடுப்பதில்லை. வேறு பலர் தமிழர்களிடம் மற்றவர்களை விட அதிக வாடகை பெறுகின்றனர். இதுபோன்றே அநேக தொழில் வழங்குனர்கள் தமிழர்களுக்குத் தொழில் கொடுப்பதில்லை. கொடுத்தாலும் குறைந்த கூலியே கொடுக்கின்றனர். இப்பாகுபாடு மனத்தடை அல்லது பொருளாதார சந்தர்ப்பவாதம் சார்ந்ததாக இருக்கலாம். அல்லது எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் காரணமாக இருக்கலாம். தமிழ்க் குடியிருப்பாளர்களும் ஊழியர்களும் அடிக்கடி படையினருடன் பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்கின்றது. இப்பிரச்சினைகள் சிலவேளை வீட்டு உடைமையாளர், தொழில் வழங்குனர் மீது மோசமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. உதாரணமாக தமிழர்கள் வாடகைக்குக் குடியிருக்கும் வீடுகள் அடிக்கடி படையினரின் தேடுதலுக்கு உள்ளாகின்றன. வீட்டுடைமையாளர் விசாரிக்கப்படுகின்றனர். அல்லது தமிழ் ஊழியர்கள் படையினரால் அடிக்கடி விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்படுகின்றனர். அதனால் வேலை நேரம் இழக்கப்படுகின்றது. அரச துறையிலும் தனியார் துறையிலும் சேர்த்துக்கொள்ளப்படும் தமிழர்களின் விகிதாசாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகின்றது. இதன் விளைவாக வசதிபடைத்த பல தமிழர்கள் (பெரும்பாலும் வயதானவர்கள்) தங்களுக்குச் சொந்தமாக வீடுகளை வாங்க முயல்கின்றனர். இன்னும் பலர் (பெரும்பாலும் இளைஞர்கள்) தங்களுக்குக் கிடைக்கக் கூடிய சுயதொழில் வாய்ப்பைத் (உம். தகவல் நிலையங்கள்) தேடுகின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஒருபோதும் மத்திய அரசில் ஒரு பலமான அரசியல் குரல் இருக்கவில்லை. ஒரு குறுகிய காலத்தைத் தவிர மாகாண நிலையிலும் அவர்களுக்கு அத்தகைய குரல் இருக்கவில்லை. வட கிழக்குக்கு வெளியே எல்லா அரசியல் மட்டங்களிலும் அவர்கள் புறந்தள்ளப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்ட சிலர், இலங்கைத் தமிழர் செறிந்துவாழும் கொழும்பு போன்ற இடங்களில் கூட



எப்போதாவதே தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் இதுவரை சிங்களவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட இரண்டு பெரிய அரசியல் கட்சிகளால் வழி நடத்தப்பட்ட (பெரும்பாலும் பாதகமான) அரசியல் அபிவிருத்திகளுக்கே (பெரும்பாலும் எதிர்மறையாக) எதிர்வினையாற்றினர். அவர்களுடைய கோரிக்கைகள் செவிமடுக்கப்பட்டதாகத் தோன்றிய அரிய சந்தர்ப்பங்களில் கூட செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களாலேயே நிராகரிக்கப்பட்டன, அல்லது தீவிரமாக அமுல்படுத்தப்படாது ஒதுக்கப்பட்டன. அதன் விளைவாக அரசியல் செயல்முறைகளில் கலந்துகொள்ளும் உந்தல் அல்லது முயற்சி மிக அரிதாகவே காணப்படுகின்றது. தற்போது கூட, முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்களின் தலைமைத்துவம் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெற்றதோடு தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் நலன்களை முன்னெடுத்துச் செல்வதில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருக்கும் அதேவேளை, பிரதான இலங்கைத் தமிழ்த் தலைமைத்துவம் தொடர்ந்தும் புறம் தள்ளப்பட்ட நிலையிலேயே உள்ளது. இலங்கைத் தமிழர்கள் மைய அரசில் தாக்கமுடன் பங்குகொள்ளும் உந்தலையோ, திறனையோ விருத்தி செய்து கொள்ளாததோடு, அவர்களை உள்ளுக்குக் கொண்டுவர எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவும் இல்லை என்றே தோன்றுகின்றது.

சிலவேளை இத்தனிமைப்படுத்தலுக்கான மூலத்தை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலத்திடம் தேடமுடியும். சுதந்திரத்தை அடுத்து வந்த ஐ.தே.க. அரசாங்கத்தின் அமைச்சரவையில் அவருக்கு ஒரு அமைச்சுப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறிப்பதற்கு (வாக்குரிமை நீக்கத்துக்கு) ஆதரவாகத் தமிழ் காங்கிரசின் வாக்குகளைப் பெறுவதற்கே இப்பதவி வழங்கப்பட்டது. அவரது கட்சியிலிருந்து எஸ்.ஜே.வி. செல்வநாயத்தின் தலைமையில் பிரிந்து சென்றவர்கள் (இவர்களே சமஷ்டிக் கட்சியை அமைத்தனர்) பொன்னம்பலத்தைத் துரோகி என்று குற்றம் சாட்டினர். அதில் இருந்து மந்திரி பதவியை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு இலங்கைத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் துரோகி எனப்பட்டம் சூட்டப்பட்டனர். டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் (1965-70) தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு 4 அமைச்சுப் பதவிகளை வழங்க முன்வந்தபோது (சமஷ்டிக் கட்சிக்கு 3, தமிழ்க் காங்கிரசுக்கு 1 ) சமஷ்டிக் கட்சி அதை நிராகரித்தது. பதிலாக, செனட்டராக இருந்த (எம்.பி. அல்ல) எம். திருச்செல்வத்தை, மாவட்ட சபை மசோதாவைக் கொண்டுவரும் ஒரே நோக்கத்துக்காக, உள்ளூராட்சி அமைச்சராக நியமித்துக் கொண்டது. உண்மையில், ஓர் அமைச்சர் என்ற வகையில், திரு. திருச்செல்வம் வெளிநாடு செல்வதற்கான உத்தியோகபூர்வமான அழைப்புகள் எவற்றையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார். அலுவலகப் பயணம் தவிர்ந்த எல்லாத் தேவைகளுக்கும் தனது சொந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரையே பயன்படுத்தினார். அதாவது அலுவலக நலன்கள் அனைத்தையும் நிராகரித்தார். மாவட்டசபை மசோதா கைவிடப்பட்டபோது, திருச்செல்வம் அமைச்சுப் பதவியைத் துறந்தார். இலங்கைத் தமிழர்கள் அவரது பதவிக் காலத்தில் எந்தப் பயனையும் அடையவில்லை.

சமரசத்துக்கான எந்த முயற்சியும் இல்லாத நிலையில் இத் தனிமைப்பாடு மேலும் முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கே வழிவகுக்கும் என்பது வெளிப்படை. தேசிய அரசியலில் இலங்கைத் தமிழரின் வழிபாகம் ஆராயப்பட வேண்டியுள்ளது. எல்லாச் சமூகங்களும் இதுபற்றிப் புதிதாகச் சிந்திக்க வேண்டியிருக்கும். தமது சுய-பார்வை (self-perception) தொடர்பாக இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் சில புதிய அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. இலங்கைத் தமிழரின் "தேசியம்"இப்போது எல்லா இலங்கைத் தமிழர்களையும் தழுவுகின்றது. சுதந்திர காலகட்டத்தில் இருந்த அளவுக்கு அது இப்போது கூறுபடுத்தப்பட்டதாக இல்லை. அரசியல் துறையில், கரைநாட்டு, மலைநாட்டுச் சிங்களவரின் இனத்துவ அடையாளங்கள் கிட்டத்தட்ட இணைந்ததுபோல, இலங்கைத் தமிழ் இனத்துவக்குழுவின் பிரிவுகளிடையே கூட இணைப்பு நிகழ்ந்துள்ளது. சமூகத் துறையில் சில தடைகள் இருப்பினும் முன்னேற்றம் காணப்படுகின்றது. இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் குவிமையம், பொதுத் துறைத் தொழில்வாய்ப்பு, பல்கலைக்கழக அனுமதி (இது யாழ்ப்பாணம்/கொழும்பு நகர்ப்புற மத்தியதரவர்க்கத் தமிழர் மத்தியில் அதி உயர் முன்னுரிமை பெற்றிருந்தது) ஆகியவற்றிலிருந்து படிப்படியாக நிலம், அதிகாரப் பகிர்வு என்பவற்றை நோக்கி நகர்ந்திருக்கிறது. (இது பெரிதும் கிழக்கு, வன்னி கிராமப்புறத் தமிழரின் நலன் சார்ந்தது).

வெளியிடப்படாத ஒரு கட்டுரையில் கொட்ஃபரி குணதிலக குறிப்பிட்டிருப்பது போல சிங்களத் தேசியவாதம் இறந்தகாலத்தில் இருந்து தோன்றியது என்றால் தமிழ்த் தேசியவாதம் நிகழ்காலத்திலிருந்து தோன்றியது எனலாம். இலங்கைத் தமிழ்த் தேசிய வாதம் அண்மைக்காலத்தில் தோன்றியதால் அது குறுங்கால வாழ்வுடையது என்று பொருளாகாது. வரலாறு பின்நோக்கிச் செல்வதில்லை. சுதந்திரத்திலிருந்து தொடர்ந்த மனவடு ஏற்படுத்திய நிகழ்வுகளை நிகழாதவை ஆக்கமுடியாது. அத்தகைய கொதி கலத்திலிருந்து எழுந்த தேசியவாதத்தைத் திருப்பி அனுப்ப முடியாது. இத் தேசியவாதம், 1995 ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்க் குழுக்களினால் கூட்டாக முன்வைக்கப்பட்ட திம்புக் கொள்கைகளின் அடிப்படையில் வரையறுக்கப்படுகின்றது. இந்நிலைப்பாடு மேலோட்டமாகப் பார்க்கும் போது பிரிவினைவாதமாகத் தோன்றக் கூடும். ஆனால், பாரம்பரியத் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய



கருத்தாக்கங்கள் (ஒற்றை இலங்கைக்கு பொருந்தாவிட்டாலும்) ஐக்கிய இலங்கைக்குப் பொருத்தமானதே. திம்புக் கொள்கையைப் பற்றிப் பேசும் வெவ்வேறு பிரிவினர் அதற்கு வெவ்வேறு விளக்கங்களைக் கொண்டுள்ளனர். ஆனால் அதன் பெறுமதி அது இலங்கைத் தமிழர்களின் ஒரு கூட்டுக் கருத்துருவாக்கம் என்பதும் அது பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது அல்ல என்பதுமாகும். ஆகவே, பேச்சுவார்த்தைச் செயல் முறைக்குள் பிரவேசிப்பதற்கு அது ஒரு நுழைவாயிலாகப் பயன்பட முடியும்.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் சமஷ்டிக் கட்சி/த.வி. கூட்டணியின் இளைஞர் பிரிவில் இருந்து எழுந்த தமிழ் இளைஞர் தீவிரவாத இயக்கத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சியும் அரசியல் சூழலைத் தீவிரமாக மாற்றி அமைத்திருக்கின்றது. இதன் தொடக்கம் சமஷ்டிக் கட்சி/த.வி.கூட்டணியில் இருந்தே வந்தது என்று தோன்றினாலும், ஆரம்பகாலத்தில் இக்குழுவினர்க்குத் தமிழ் மக்களின் ஆதரவு இருந்தமை தெளிவாகத் தெரிகின்றது. எனினும், இத்தீவிரவாதம் முழுமையான இனப் பாராபட்சம் (உம்: மொழி, வேலைவாய்ப்பு, பல்கலைக் கழக அனுமதி தொடர்பானவை), குரூரமான அடக்குமுறை (பொலிஸ், இராணுவ நடவடிக்கைகள்) என்பவற்றை அடித்தளமாகக் கொண்டே வடிவமும் பலமும் பெற்றது. 1977, 1979, 1981, 1983ம் ஆண்டுகளில் நிகழ்ந்த இன ஒழிப்பு முயற்சிகளும், அவற்றின் பின்விளைவாக பாராளுமன்றத்திலிருந்து த.வி. கூட்டணி உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டதும் இளம் தீவிரவாதிகள் தலைமைத்துவத்தைக் கையேற்க வழியேற்படுத்தியது. காலப்போக்கில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏக தலைமையாக எழுச்சியடைந்தது.

புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் இளைஞர் குழுக்களை ஆயுதப்படைகளின் ஒரு பகுதியாகத் (தவறாகப்) பயன்படுத்தியமை, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களுக்கு இருந்திருக்கக் கூடிய தகைமையை இல்லாமலாக்கியது. பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் த.வி. கூட்டணி சக்தி இழந்தமையும், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் கொள்கைகளும், அரசியல் யதார்த்தங்களும் குறிப்பாக யுத்தமும் இணைந்து தமிழ்த் தேசியவாதத்தை, பிரிவினையின் பக்கம் திருப்பின. ஆனால், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இது தொடர்பாக அதிக உறுதிப்பாடு இன்மையும், எதிர்ப்புணர்வுகளும் உள்ளன. ஆயினும், அவர்கள் தம் அரசியல் அபிப்பிராயத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்குச் சூழல் உகந்ததாக இல்லை. இச் சுதந்திரத்தைப் பயன்படுத்தியமைக்காக அநேகர் கொல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களின் நடுப்பகுதியிலிருந்து சிறிய இடையீடுகளுடன் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் புலிகள் இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்தை உறுதிப்படுத்தவும், ஏனைய தீவிரவாத குழுக்களை ஓரங்கட்டவும், த.வி. கூட்டணியின் செல்வாக்கைப் படிப்படியாக நீக்கவுமே உதவியிருக்கின்றது. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தவும் சமாதானமான அரசியல் தீர்வுக்கு வழி ஏற்படுத்தவுமே யுத்தம் மேற்கொள்ளப்படுவதாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் கூறுகின்றன. உண்மையில் (தவிர்க்க முடியாத வகையில்) அது புலிகளின் நிலையையே பலப்படுத்தி இருப்பதோடு, அரசியல் தீர்வை மேலும் சிக்கலாக்கியும் இருக்கிறது. சில தமிழ்க் குழுக்கள் மத்தியில் அவற்றின் ஆரம்பகாலத்தில் கணிசமான மார்க்சியச் செல்வாக்கு இருந்த போதிலும், பிரதான மாக்சியக் கட்சிகளைக் கூடப் பாதித்த இனத்துவரீதியான பிளவுகள், அக்கட்சிகள் புலிகள் இயக்கத்தின் மீது அதன் உருவாக்க காலத்தில் எத்தகைய செல்வாக்கையும் அல்லது இணைப்பையும் ஏற்படுத்துவதைத் தடுத்து விட்டன. புலிகள் இயக்கத்தின் பூரணமான தனிமைப்பாடும், அந்த இயக்கத்துடன் பிறர் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் அதன் அரசியல் பிரிவுகள் எவையும் பகிரங்கமாக இயங்காமையும் தீர்வை நோக்கிச் செல்வதற்குத் தடையாக உள்ளன. இது தேசிய நலனுக்கு உகந்ததல்ல.

## சுயநிர்ணயக் கோரிக்கை

இலங்கைத் தமிழ்த் தேசிய வாதத்தின் ஆள்புல எல்லை எப்போதும் இலங்கைக்குள்ளேயே குவிமையம் கொண்டுள்ளது. தமிழ் நாட்டிலும் வேறு இடங்களிலும் வாழும் தமிழர்களுடன் நெருக்கமான மொழி, மத, பண்பாட்டுத் தொடர்புகளை கொண்டிருக்கும் போதிலும் தமது தாயகம் இலங்கையிலேயே இருந்தது; அது என்றும் அங்கேயே இருக்கும் என்பதே இலங்கைத் தமிழர்களின் நோக்கு நிலையாகும். இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும் இந்தியா உட்பட வேறு நாடுகளில் நிரந்தர வசிப்பிடத்தை உருவாக்கிக் கொண்ட இலங்கைத் தமிழர்களும் இந்த உணர்வைக் கொண்டிருக்கின்றனர். இதில் எப்போதாவது மாற்றம் ஏற்படும் என்பதற்குரிய அறிகுறி எதுவும் இல்லை.

இத்தாயக உணர்வு இலங்கை முழுவதையுமா அல்லது அதன் ஒரு பகுதியையா உள்ளடக்குகின்றது என்பது தொடர்பான ஐயப்பாடு கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட ஓர் ''அபிவிருத்தி'' ஆகும். ஆனால் தமிழ் நாடோ அல்லது இந்தியாவோ ஒரு போதும் இலங்கைத் தமிழர்களின் தாயகமாகக் கருதப்படவில்லை. கடந்த மூன்று தசாப்த காலத்துள் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் சிலர் இலங்கைத் தமிழ் தேசியவாத உணர்வுகளில் பங்குகொண்டு வந்துள்ளனர். ஆனால் இது ஒருபோதும் ஒரு தீவிர தேர்தல் பிரச்சினையாக இருந்ததில்லை. தமிழ் நாட்டுத் தமிழ் வாக்காளர்களுக்கு எப்போதும் வேறு அவசரப் பிரச்சினைகள் இருந்தன. இப்பிரச்சினை தமிழ் நாட்டுத் தலைமைத்துவத்துக்கும் இந்திய மைய அரசுக்கும் இடையிலான உறவைப் பொறுத்தவரையிலேயே மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது.



ஏனைய பல மொழிவழிக் குழுக்கள் போலவே தமிழ் அடையாள உணர்வைக் கொண்ட உலகளாவிய ஒரு புலம்பெயர் குழு இருக்கின்றது. ஆனால் இந்தப் பிணைப்புகள் பலவீனமானவை. குழு நலன் சார்ந்த அடிப்படையான முரண்பாடுகள் நிலவுகின்றன.

இலங்கையிலும் வேறு நாடுகளிலும் வாழும் தமிழர்களின் நலன்கள் ஒத்திருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறாகும். யாழ்ப்பாணத் தமிழர்கள் தென் இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்களின் நலன்கள் பற்றி ஓரளவு வெறுப்புக் கொண்டுள்ளனர். மலையகத் தமிழர்களுக்குத் தங்கள் சொந்த அரசியல் தலைவர்கள் உள்ளனர். இலங்கை ஒரு ஆரோக்கியமான, பன்மைத்துவ, சகிப்புத்தன்மை மிக்க சமூகமாக வளர்வதிலேயே தங்கள் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். அவர்கள் புலிகள் இயக்கத்தின் குழப்பமூட்டும் பிரிவினைவாதப் பாத்திரத்தையும், அது அடிக்கடி மேற்கொள்ளும் வன்முறைகளையும் கண்டு அஞ்சுகின்றனர். சிங்களவரின் பதிலடிகளுக்கு முதலில் பாதிக்கப்படுபவர்கள் தாங்களே என்பது இதற்குக் காரணமாகும்.

மலையகத் தமிழர்களின் நலன்கள் அவர்களது தேயிலைக்கும் வேறு தோட்டப் பயிர்களுக்கும் கிடைக்கும் நல்ல விலை, திறந்த சந்தைகள் என்பவற்றில் பெரிதும் தங்கியுள்ளன. இருப்பினும், இந்திய-இலங்கைச் சுதந்திர வர்த்தக உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைத் தேயிலை இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்த மாநில அரசுகளுள் தமிழ்நாடும் இடம்பெற்றது. எந்த ஒரு தமிழ் நாட்டு முதலமைச்சரும் நீலகிரித் தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் நலன்களைக் பேண முனைவாரே தவிர இலங்கையிலுள்ள தமிழ்த் தொழிலாளர்களின் நலன்களை அல்ல என்பது இயல்பானதே. (பார்த்தசாரதி, 2000)

தமிழ்த் தேசியவாதத்தின் தீவிர ஆதரவாளர்கள் அநேகர் இலங்கைக்குள் மட்டும் அன்றி வெளிநாடுகளிலும் சிதறி இருக்கின்றனர். எனினும் அதன் ஆள்புல எல்லை தெளிவாக இலங்கைக்குள்ளேயே மையம் கொண்டிருக்கின்றது. கடந்த ஐந்து தசாப்தங்களாக நடைபெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அபிவிருத்திகளின் பின்னணியில் இத்தேசியவாதத்தின் ஒரு அடிப்படைக் கூறாக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை எழுந்துள்ளது. பிரிவினையின் அநேக ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும், சுயநிர்ணய உரிமை என்பதும், தன்னிச்சையான பிரிவினைக்கான உரிமை என்பதும் ஒன்றே என்ற தவறான விளக்கத்தைக் கொண்டுள்ளனர். இதற்கு முரணாக 'கிர்கிஸ்' (1994) சுட்டிக் காட்டுவதுபோல சுயநிர்ணய உரிமையின் பல முகங்களுள் பின்வருவனவும் அடங்கும்.

(6) கூட்டமைப்புகளுள் சுயாட்சிப் பிரதேசங்களில் இருப்பதுபோல, வாழ்புல எல்லைகளால் அல்லது பொதுவான இனத்குழும், மத, மொழி அம்சங்களால் பிணைக்கப்பட்ட குழுக்களின் பிரிவினைக்குக் குறைந்த, வரையறுக்கப்பட்ட சுயாதீன உரிமை.

(7) சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் உறுப்புரை 27ஆலும், தேசிய அல்லது இனத்துவ, மத, மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய பொதுச் சபையின் 1992ம் ஆண்டுப் பிரகடனத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல ஒரு பெரிய அரசியல் அலகுக்குள் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகள்.

சர்வதேச சட்டத்தின்படி பிரிந்து செல்வதற்கான உரிமை தேர்வுகளுள் ஒன்று மட்டுமே. அத்தேர்வு கூட தன்னிச்யையான முறையில் மேற்கொள்ளப்பட முடியாது. உண்மையில் இப்பிரச்சினை கனடா கவுன்சில் ஆளுநரினால் மேல் நீதிமன்றத்தில் பின்வருமாறு முன்வைக்கப்பட்டது.

> சர்வதேசச் சட்டத்தின் கீழ் சுயநிர்ணய உரிமை என்பது கனடாவில் இருந்து தன்னிச்சையாக கியூபெக் பிரிந்து செல்வதற்குரிய உரிமையை தேசிய அசம்பிளிக்கு அல்லது சட்டசபைக்கு அல்லது கியூபெக் அரசாங்கத்துக்கு வழங்குகின்றதா?........

இதற்கு விடையாக கனடா உயர் நீதிமன்றம் (1998) அதன் அபிப்பிராயத்தை மிகத் தெளிவாக முன்வைத்தது.

126 ஒரு மக்கள் குழுவின் சுயநிர்ணய உரிமை சாதாரணமாக உள்ளக சுயநிர்ணயத்தின் மூலம் நிறைவு செய்யப்படுகின்றது. அதாவது இருக்கும் ஒரு அரசின் சட்டகத்துக்குள் ஒரு மக்கள் முழு தன் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அபிவிருத்தியை மேற்கொள்ளுதல். வெளிவாரியான சுய நிர்ணய உரிமை (இது தன்னிச்சையாகப் பிரிந்து செல்வதற்குரிய உறுதிப்பாட்டைக் குறிக்கும்) மிகத் தீவிரமான நிலைமைகளில் மட்டுமே எழுகின்றது. இங்குகூட கவனமாக வரையறுக்கப்படும் சூழ்நிலைகளிலேயே தோன்றுகின்றது....



127 சுயநிர்ணயம் பற்றிய சர்வதேசச் சட்டத்தின் அடிப்படைக்கருத்து, நடைமுறையில் இருக்கும் அரசுகளின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்குப் பங்கம் விளைவிக்காத ஒரு சட்டகத்துக்குள்ளேயே பரிணமித்திருக்கின்றது.

130 கனடா உட்பட நடைமுறையிலுள்ள அரசுகளின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும், ஒரு மக்கள் குழு பூரணமான சுயநிர்ணயத்தைப் பெறுவதற்கும் இடையே பொருந்தாமைகள் எதுவும் இல்லை. எல்லா மக்களையும் அல்லது தன் ஆள்புலத்துக்குள் வாழும் மக்களைச் சமத்துவமான அடிப்படையில், பாகுபாடு இன்றி, அதன் உள்ளக ஒழுங்குகளில் சுயநிர்ணயக் கொள்கைக்கு மதிப்பளித்து, பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தைக்கொண்ட ஒரு நாடு சர்வதேச சட்டத்தின் கீழ் தன் ஆள்புல ஒருமையைப் பாதுகாக்கும் தகைமையைக் கொண்டுள்ளது.

134 ஒரு மக்கள் தொகுதி உள்ளக ரீதியில் அர்த்தமுள்ள வகையில் தன் சுயநிர்ணய உரிமையை பயன்படுத்துவதற்குத் தடை ஏற்படும் பொழுது... சுய நிர்ணய உரிமை ஒருதலைப்பட்சமான பிரிவினைக்கான உரிமைக்கு வழிகோலலாம் எனப் பலர் இதற்கு விளக்கம் கூறியிருக்கிறார்கள். இத்தகைய பூரணமான தடை பிரிவினைக்கான உரிமைக்கு இட்டுச்செல்லலாம் என 'வியன்னா பிரகடனம்' அங்கீகாரம் வழங்குகின்றது.

கனடா உயர் நீதிமன்றமும், இவ்விடயம் தொடர்பான ஏராளமான ஆய்வுகளும் (உ-ம்: Steiner and Alston, 2000) உள்ளக, வெளிவாரி சுயநிர்ணயம் (internal and external self -determination) என்பவற்றுக்கிடையே ஒரு தெளிவான வேறுபாட்டைச் செய்வதை நாம் காண்கின்றோம். ஒருதலைப்பட்சமான பிரிவினைக்கு இடம்கொடாத, உள்ளக சுய நிர்ணயத்துக்கான தாக்கமான வழிமுறைகள் (உ-ம் பாகுபாடு அற்ற கூட்டாட்சி) அதற்குரிய தூண்டுதல்கள் எல்லாவற்றையும் நியாயமற்றவை ஆக்கிவிடுகின்றது. மறுபுறமாக, உள்ளக சுய நிர்ணயத்தை மறுப்பது பிரிவினைக்கான உரிமையை நியாயப்படுத்திவிடும்.

## எதிர்காலம்

சமாதானத்துக்கான மாற்று வழிகள் எவை? அவை எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும்? இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் குறிக்கோள்களை ஏனைய இனக்குழுமங்களின் நலன்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரசப்படுத்துவது எப்படி? சிலவேளை இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் இறுதியில் மலையகத் தமிழர்களையும், சிலவேளை முஸ்லிம்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் அகலிக்க முடியும். ஆனால், அது இன்னும் நிகழவில்லை. அத்தகைய ஒரு வளர்ச்சி எவர் மீதும் திணிக்கப்பட முடியாதது. முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் தங்கள் தனித்துவத்தைப் பேணும் உரிமை கொண்டுள்ளனர்.

தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட, வடகிழக்கை உள்ளடக்கிய ஒரு சுயாட்சிப் பிரதேசம் என்ற குறிக்கோள் சிங்களவர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள், வடகிழக்குக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் ஆகிய அனைவரது நலன்களுடனும் எவ்வாறு ஒத்துப்போகும்? வட கிழக்கில் வாழும் இலங்கைத் தமிழர்கள் அப்பிரதேசத்தில் தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு சுயாட்சி அலகைக் கோரினால், அப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களும் அந்த நிருவாகத்தில் தங்கள் குரல் கணிசமாக ஒலிக்கக்கூடிய நிறுவன அமைப்புகளையோ அல்லது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு சுயாட்சி அலகையோ கோரமுடியும். இப்பிரதேசத்தின் வெவ்வேறு இனக்குழுமங்களின் நலன்களைத் திருப்திப்படுத்தக்கூடிய பிராந்திய (வடகிழக்கு) நிருவாக அமைப்பு பற்றிப் பேச வேண்டும்; அல்லது ஒரு சமாந்தரான முஸ்லிம் பெரும்பான்மைச் சுயாட்சிப் பிரதேசம் (தென்கிழக்கு) ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதன் எல்லைகள் பற்றிப் பேசப்பட்டு உடன்பாடு காணப்பட வேண்டும். அப்படி நிகழுமாயின் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறைத் தேர்தல் தொகுதி ஊவாப் பிரதேசத்துடன் இணைக்கப்பட வேண்டி இருக்கலாம்.

அரசியல் எழுச்சியில் அதிகரித்து வரும் இனக்குழும ஊடுருவலுக்குப் புறம்பாக, ஒரு சுயாதீன கிழக்குப் பிராந்தியம், அதன் தனித்துவமான வரலாறு, பண்பாடு, மூன்று இனத்துவக் கலப்பு ஆகியவற்றுடன் இலங்கையில் சமாதான சகவாழ்வுக்கு ஒரு இலட்சிய மாதிரியாக அமைய முடியும். ஒவ்வொரு இனக்குழுமமும் மற்ற இனக்குழுமங்களுடன் கூட்டிணைந்து பிராந்திய அரசாங்கத்தை உருவாக்கும் உள உந்துதலைப் பெறவேண்டும். தேசிய அரசியல் கட்சிகள் கிழக்கில் தமது தற்போதைய, எதிர்கால நலன்களை மனங்கொண்டு இலங்கையின் எந்தப் பகுதியிலாவது இனவாத அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளவும் வேண்டும். துக்ககரமான வகையில், குரூரமான வன்முறைகளும் இன அழிப்பும் சுயாதீனக் கிழக்குப் பிராந்தியத்துக்கான தேர்வை மூடிவிட்டதாகத் தோன்றுகின்றது. அதன் உடைவுக்கான சாத்தியப்பாடுகளே அதிகரித்துக் காணப்படுகின்றன.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை, பெருந்தொகையாக அவர்கள் வாழும் பிரதேசங்களில் சமமான மொழி உரிமைக்கான அவர்களது கோரிக்கை நியாயமானது. சிலவேளை இலங்கைத் தமிழ், மலையகத் தமிழ்ச் சமூகங்களின் படிப்படியான இணைப்பு காரணமாக (இந்தப் போக்கு வடக்குக் கிழக்குப் பகுதியில் அல்லது கொழும்பில் குடியமர்ந்துள்ள மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை ஏற்கனவே தொடங்கிவிட்டதாகத் தெரிகிறது). இறுதியில் அவர்கள் ஒரு தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேசத்தில் வாழ விரும்பினால், அவ்வாறு தாம் போகக்கூடிய பிரதேசமாக அவர்கள் வட கிழக்கைக் காணக்கூடும். தமது மொழி, மதம், பண்பாடு மற்றும் ஏனைய நலன்களை வளர்க்கக் கூடிய பிராந்திய அரசாக அவர்கள் அதை எதிர்பார்க்க முடியும். வடகிழக்குக்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள், அப் பிராந்தியமும் பிராந்திய அரசும் இந்த அடிப்படைகளில் நிறுவப்பட வேண்டும் என ஏற்கனவே கருதத் தொடங்கிவிட்டார்கள்.



ஒரு தமிழ்ப் பெரும்பான்மை வடகிழக்குச் சுயாட்சிப் பிரதேசத்தின் பிறப்பு அப்பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன்களுக்காக மட்டுமே என்ற கருத்தை நிராகரிப்பது அவசியமாகும். இந்திய உதாரணம் இவ்வகையில் பயனுடையது. முதலாவதாக, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட, மொழிவாரியான மாநிலங்களின் மறுசீரமைப்பு, அவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டிருக்கவில்லை. அது ஒரு அகில இந்தியப் பிரச்சினையாகவும், எல்லா இடங்களிலும் வாழ்ந்த எல்லாரையும் கவனத்தில் கொண்டதாகவும் அமைந்தது. இரண்டாவதாக, ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழியைப் பேசிய எல்லாக் கிராமங்களும் அந்த மாநில நிருவாகத்துக்குள் கொண்டுவரப்படவில்லை. ஆள்புலத் தொடர்ச்சிக் கொள்கை பின்பற்றப்பட்டது. ஒரு மாநிலத்தின் ஆட்சி மொழியில் இருந்து வேறுபட்ட மொழிகளைப் பேசிய ஆயிரக்கணக்கான கிராமங்கள் அந்த மாநில நிருவாகத்துக்குள் தொடர்ந்தும் இருந்தன. மூன்றாவதாக, மறு சீரமைப்பினால் பெருமளவிலான குடிப்பெயர்ச்சிகள் இடம்பெறவில்லை. மிகப் பெரும்பாலான குடிமக்கள் அவர்கள் வாழ்ந்த இடத்திலேயே தொடர்ந்தும் இருந்தனர். தமது மொழிவழித் தாயகங்களுக்குச் செல்லவேண்டிய காரணம் எவற்றையும் அவர்கள் காணவில்லை.

ஒவ்வொரு மொழிக் குழுமத்தையும் சேர்ந்த மில்லியன் கணக்கான இந்தியர்கள் பல மாநிலங்களில் சிதறி வாழ்கின்றனர். கிட்டத்தட்ட உலகெங்கும் வாழும் புலம்பெயர்ந்த மக்கட் தொகுதி போலவே, அவர்கள் வாழும் மாநிலத்தின் சூழலுக்கும், கொள்கைகளுக்கும் உணர்வு ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அவர்கள் இணங்கி வாழ்வதற்கு அவர்களது தாயகம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு உதவியிருக்கின்றதே தவிர அதற்கு ஊறுவிளைவிக்கவில்லை. உண்மையில் அதிகரித்து வரும் உள்ளகப் புலப்பெயர்ச்சி இந்திய சமஷ்டியின் ஒரு சாதகமான அம்சமாகும். இது இந்தியாவின் ஒருமைப்பாடு, பன்மைத்துவம் இரண்டையுமே துலக்கமாகக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பெரும்பான்மைச் சுயாட்சிப் பிரதேசம் ஒன்றின் உருவாக்கம் சிங்களவர் மத்தியில் பிரிவினை பற்றிய அச்சத்தையும், அப்பிரதேசத்தில் வாழும் சிங்களவர்களின் பாதுகாப்பு பற்றிய அச்சத்தையும் கூடத் தோற்றுவித்திருக்கிறது. ஏற்கனவே சுட்டிக் காட்டியதுபோல, சமஷ்டி பற்றிய கருத்தாக்கமும், வேறு நாடுகளில் அது நடைமுறைப்படுத்தப்பட்ட விதமும் சமஷ்டி முறை இன முரண்பாட்டை (முற்றிலும் அகற்றாவிட்டாலும்) மிகவும் குறைத்துவிடும் என்பதை உணர்த்துகின்றன. பிரிவினையைப் பொறுத்தவரையிலும் கூட வேறுநாடுகளின் அனுபவம் பயனுடையது. அதிகாரப் பகிர்வுக்குத் தயாராகவுள்ள நாடுகளைவிட (சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து) அடக்குமுறையும், அதீத அதிகார மையப்படுத்தலும் நிலவும் நாடுகளில் (வங்காள தேசம் தொடர்பில் பாகிஸ்தான்) பிரிவினைக்கான கோரிக்கை அதிக வலுவுடையதாக இருப்பதைக் காண்கின்றோம். கனடாவும் இந்தியாவும் சமஷ்டி யாப்பைக் கொண்டிருந்திருக்காவிட்டால் எப்போதோ பிளவுட்டிருக்கும் என்று நாம் வாதிக்க முடியும். அதுபோல் சமத்துவம், உள்ளக சுயநிர்ணயம் என்பவற்றைப் பெற்றிருந்திருந்தால் வங்காள தேசம், எரிட்றியா, பொஸ்னியா ஆகியவை பிளவுபட்டிருக்காது என்றும் நாம் கூறலாம். இருப்பினும், வரலாற்று உதாரணங்கள், பிரிவினை, தமிழ் நாட்டுடனான அரசியல் இணைப்பு பற்றிய சிங்களவரின் அச்சத்தை நீக்கப்போதா. இவை கருத்தில் கொள்ளப்பட்டு அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மறுபுறத்தில், பிராந்திய அரசுகளைக் கலைக்கவும், மத்திய அரசின் நேரடி ஆட்சியை அமுல்படுத்தவும் கூடிய மத்திய அரசின் வரையறை அற்ற அதிகாரம் பற்றிய சிறுபான்மையினரின் அச்சமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வேறு பிரச்சினைகள் பற்றி மிகக் குறைந்த அக்கறையே காணப்படுகின்றது. முன்னாள் தீவிரவாதிகளின் தீர்வுக்குப் பின்னான பாத்திரம் பற்றியும், உள்ளகப் பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றியும் (வெவ்வேறு வகையான அரசியல் எதிராளிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பாதுகாப்பு உட்பட) மிகக் குறைவான கவனமே செலுத்தப்பட்டுள்ளது. இவை தாண்டுவதற்கு மிகவும் சிக்கலான தடைகளாக அமையலாம். இவ்விடயங்களில் தெளிவான உடன்பாடுகள் இன்றி இவற்றுக்குத் தீர்வுகளும் இருக்க முடியாது. இப்பிரச்சினைகள் தொடர்பாக எல்லாச் சமுகங்கள் மத்தியிலும் அதிக கலந்தாலோசனைகளும் சிந்தனையும் தேவைப்படும்.

இலங்கையின் இனகுழும முரண்பாடு காரணமாக பெருந்தொகையான இலங்கைத் தமிழர்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளதோடு, பெருந்தொகையானோர் வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்துள்ளனர்.



உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களில் அநேகர் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப விரும்புவர். பலர் அவ்வாறு விரும்பாமலும் இருக்கலாம். வெளிநாட்டில் புலம் பெயர்ந்தவர்களில் அநேகர் கூட ஒரு தீர்வு வரும்பட்சத்தில் இலங்கை திரும்ப விரும்பக்கூடும் எனினும் அநேகர் அவ்வாறு வர விரும்பமாட்டார்கள். தீர்வு நிகழும் பட்சத்தில் பலாத்காரமாகத் திரும்பி அனுப்பப்படுவோம் என்று அஞ்சுபவர்கள் அதை எதிர்க்கக் கூடும். இவர்களுள் பலர் வெவ்வேறு வழிகளில் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களாவர். இலங்கைத் தமிழர்களின் துயரம், நெருக்கடி என்பன பற்றி சர்வதேச கவனத்தை ஈர்த்தல், புலம் பெயர்ந்தவர்களுக்குப் பொருளாதார உதவி செய்தல், வெவ்வேறு அரசாங்கங்கள், அரசசார்பற்ற, சர்வதேச நிறுவனங்கள் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தல் போன்றவற்றில் இவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம். சிலர் ஏதோ ஒரு வகையில் உள்நாட்டு யுத்தத்துக்கு ஆதரவு வழங்கியிருக்கலாம். வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கும் இடையே உள்ள உறவு மிகக் குறுகியது. பெரும்பாலும் நட்பு ரீதியற்றது. இந்த நிலையைத் திருத்துவது தேசிய நலனுக்கு அவசியமானதாகும்.

இவ்வகையில் புலம் பெயர்ந்த வெவ்வேறு பிரிவினர்க்கு வெவ்வேறு குறிக்கோள்களும் வேறுபட்ட நலன்களும் உள்ளன. கூட்டு மொத்தமாக ஏதோ ஒருவகையில் அவர்கள் கணிசமான அரசியல் செல்வாக்கைச் செலுத்துகின்றனர். பன்முகப்பட்ட, பரஸ்பரம் எதிர்முரணான நலன்களைக் கொண்ட இத்தகைய சிதறிப் பரந்த குடித்தொகையை உள்ளடக்கிய இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் இந்த யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். குடித்தொகைச் சிதறலை முற்றிலும் பழைய நிலைக்குக் கொண்டு போக முடியாததுபோல், போருக்கு முந்திய குடிப்பரம்பலை மீள் அமைக்கும் வகையில் கிழக்கிலும், இலங்கைக்குள்ளும் கூட அவர்களை மீள்குடியேற்றம் செய்தல் சாத்தியமற்றது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முரண்பாடுகளை அரைகுறையாகவேனும் தீர்ப்பது அத்தியாவசியமாகும். இது செய்யப்படும் வரை சமூகத்தின் வெவ்வேறு பிரிவினர்கள் பரஸ்பரம் எதிர்முரணான குறிக்கோள்களை ஊக்கப்படுத்துவது தொடரும். இது முரண்பாட்டின் தீர்வுக்கு இடையூறாக அமையலாம்.

லியோனார்ட் வூல்ஃப் 1938ல் அதிகபட்ச அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் அரசியல் யாப்பு ரீதியான ஏற்பாடுகளை அல்லது சமஷ்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையை அறிமுகப்படுத்துவதை ஆதரித்துப் பேசினார்....... லியோனார்ட் வூல்ஃபின் தொலை நோக்குக்குப் புறம்பாக..... சமத்துவம், இனப் பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு என்பவற்றின் அடிப்படையில் ஒரு பல்லின சமூகத்தை உருவாக்குவதற்கான அரசியல் யாப்பு ரீதியான அடித்தளத்தை அமைப்பதில் இலங்கையின் தோல்வி, இனமுரண்பாட்டை மோசமடையச் செய்திருக்கிறது." (திருச்செல்வம், 1997:23). எந்த அரசும் நிலைத்திருக்க வேண்டுமாயின், அதன் குடிமக்களின் எல்லாப் பெரும்பிரிவினரின் பார்வையிலும் அது நியாயமானதாகத் தோன்ற வேண்டியது அவசியமாகும். அப்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கத்தை உருவாக்குவதிலும், ஆட்சியின் எல்லா நிலைகளிலும் ஒரு பங்கு இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். மத்தியில் அரசாங்கத்தை உருவாக்குவதிலும் ஆட்சிபுரிவதிலும் இலங்கைத் தமிழர் சமூகத்துக்கு ஒரு பெரிய பங்கு இருக்கும் என்பதை உறுதிப்படுத்துவது சிக்கலாக இருக்கலாம். ஆனால், மாகாண மட்டத்தில் போதிய அளவு அதிகாரப் பகிர்வு, இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்துக்கு இதுவரை இல்லாத ஒரு திருப்தியைத் தரமுடியும். இதுவே முக்கியமானது.



# Translation of the abstract

## தமிழ்த் தேசியவாதம்

இக்கட்டுரை தேசியவாதம் பற்றிய பல்வேறுபட்ட கருத்துகளைப் பரிசீலித்து, தேவைக்குப் பொருத்தமான ஒரு வரைவிலக்கணத்தைக் காண முயல்வதோடு, இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் பின்னணி, அதன் வளர்ச்சி என்பவற்றையும் ஆராய்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றத்துக்கும், தொடரும் உள்நாட்டு யுத்தத்துக்கும், உலகளாவிய புலப்பெயர்ச்சிக்கும் ஏதுவாக அமைந்த இத் தேசியவாதத்தின் வன்மையான உருமாற்றத்துக்கு இட்டுச் சென்ற தொடர்ச்சியான நெருக்கடிகளை இனங்கண்டு அவற்றைப் பரிசீலிக்கின்றது. உள்ளக, வெளிவாரிச் சுய நிர்ணய உரிமை பற்றிய கருத்தாக்கங்கள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது. உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கண்டு நிலையான சமாதானத்தை அடைவதன் பொருட்டுத் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றியும் இக்கட்டுரை பேசுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## References / Bibliography

Anderson, Benedict
1991 "Imagined communities", London and New York: Verso

Brass, Paul
1974 "Language, religion and politics in North India", London and New York:
Cambridge University Press

Chaudhuri, Pramatha
1920 "Bengali patriotism", in Sabuj Patra, translated and reprinted in Facets, Sept. 1982

De Silva, K. M.
1998 "Reaping the whirlwind", New Delhi and New York: Penguin Book

Eriksen, Thomas Hylland
1993 "Ethnicity and nationalism", London and Boulder, USA : Pluto Press

Geertz, Clifford
1963 "The integrative revolution" in C. Geertz (ed) "Old societies and new states",
New York : The Free Press of Glencoe.

Gellner, Ernest
1983 "Nations and nationalisms", Oxford : Blackwell

Ghosh, Partha S.
1997 " Hindu nationalism, the politics of nation-building and the implications for the legitimancy of the state", in S. K. Mitra and D. Rothermund (ed), "Legitimacy and conflict in South Asia", New Delhi : Manohar

Hellman-Rajanayagam, Dagmar
1990 "The politics of the Tamil past", in Jonathan Spencer (ed) "Sri Lanka. History and the roots of conflict", London and New York : Routledge



Indrapala, K
1983 "Jaffna", Colombo : Department of Information

Ignatieff, Michael
1995 " Blood and belonging : journeys into the new nationalism", New York: The Noonday Press

Kadirgamar, Santasilan
1980 "The Jaffna Youth Congress" in Handy Perinbanayagam Commemoration Society (ed) "Handy Perinbanayagam", Jaffna

Kirgis Jr., Frederic
1994 "The degrees of self-determination in the United Nations era", in 88 American Journal of International Law 304

Kohn Hans,
1944 " Idea of nationalism: a study of its origins and background", New York: Mcmillan

Krishna, Sankaran
1998 "Divergent narratives: Dravidian and Eelamist Tamil nationalisms", in M. Roberts (ed) "Sri Lanka. Collective Identities Revisited, Vol I", Colombo : Marga

Muir, Ramsay
1919 "Nationalism and internationalism : the culmination of modern history", Boston : Houghton

Nesiah, K.
1945 "The mother tongue in education", Colombo : Ola Books
1981 "Education and human rights in Sri Lanka", The Christian Institute for the Study of Religion and Society, Sri Lanka

Parthasarathy, G.
2000 "Tamil nationalism and the Sri Lanka crisis" July 17, 2000: rediff. com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pathmanathan, S.
1999 "Tamil identity, history and historiography", Seminar on history, identity and historiography, Colombo, 1-13 December

Peiris, Paul E.
1917 "Nagadeepa and Buddhist remains in Jaffna", in Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol 27, No 70, pp.17-18

Potter, David M.
1982 "The historian's use of nationalism and vice versa", in America Historical Review 3

Roberts, Michael
1994 "Exploring confrontation", Switzerland : Harwood Academic Publishers
1997 M. Roberts (ed) "Sri Lanka. Collective identities revisited, Vol I ", Colombo : Marga Institute
1998 M. Roberts (ed) "Sri Lanka. Collective identifies revisited, Vol II", Colombo : Marga Institute

Seton-Watson, Hugh
1977 "Nations and states", London : Methuen

Steiner, Henry J. and Philip Alston
2000 "Chapter 15 : Self-determination and autonomy regimes", in "International human rights in context : law, politics, morals", Oxford and New York : Oxford University Press

Supreme Court of Canada
1998 : 2 SCR 217, 37 International Legal Matters 1342

Tiruchelvam, Neelan
1997 "Devolution of power, the problems and challenges" in ICES (ed) Sri Lanka : the devolution debate, Colombo : ICES

Wagner, Christian
1997 "Sri Lanka - crisis in legitimacy", in S. K. Mitra and D. Rothermud (ed) "Legitimacy and conflict in south Asia". New Delhi : Manohar

Wilson, A. J.
1988 "The break-up of Sri Lanka", London : C.Hurst & Co.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி தேவநேசன் நேசையா

இலங்கைச் சிவில் சேவையில் 1959 இல் சேர்ந்தார். 1995 இல் இளைப்பாறும் பொழுது, போக்குவரத்து, சூழல் மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் செயலாளராக விளங்கினார்.

ஹாவாட் பல்கலைக்கழகத்தில் தமது கலாநிதிப் பட்டத்துக்கு "An Inter - Country Study of Affirmative Action (உடனிலை முனைப்பான செயற்பாடுகள் பற்றிய நாடுகளின் ஊடான ஓர் ஆய்வு) என்ற தலைப்பில் ஆய்வு செய்தார். இதன் மீளாக்கப் பதிப்பு ஒக்ஸ்ஃ போட் பல்கலைக்கழக வெளியீடாக Discrimination with Reason? The Policy of Reservations in United States, India and Malaysia (காரணத்துடனான பாரபட்சம்? ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, மலேசியாவிலுள்ள ஒதுக்கீட்டுக் கொள்கை) 1997 இல் வெளியிடப் பெற்றது.

## தமிழ்த் தேசியம்

தேசியம் பற்றிய பல்வேறு எண்ணக்கருக்களை ஆழமாக நோக்குவதுடன் தொடங்கும் இக்கட்டுரை தலைப்புக்கு இயைபான ஒரு வரைவிலக்கணத்தை நிறுவிக்கொண்டு இலங்கைத் தமிழ் தேசியவாதத்தின் பின்புலம், தோற்றம், வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறுகின்றது. இந்த எடுத்துக்கூறல் முயற்சியினூடே விடுதலைப் புலிகளின் மேற்கிளம்புகை, எழுச்சி, தொடர்ந்து நடைபெறும் சிவில் யுத்தம், புலப்பெயர்பு என வரும் பல்வேறு நெருக்கடிகளினூடே இத்தேசியவாதம் உருமாற்றம் பெற்றுள்ள முறைமையினை இது விபரிக்கின்றது. அகநிலை, புறநிலை, சுயநிர்ணய உரிமை என்ற எண்ணக்கருக்கள் பற்றி எடுத்துப் பேசும் இக்கட்டுரை இந்த சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் மேற்கொள்ள வேண்டிய பேச்சுவார்த்தை முறைகள் பற்றியும் நின்று நிலைக்கக் கூடியதான ஒரு சமாதானத்தை அகநிலைச் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஈட்டுவதன் மூலமும் ஈட்டுவது பற்றி எழக்கூடிய விடய வினாக்களையும் இக்கட்டுரை முன் நிலைப்படுத்துகிறது.

சுயநிர்ணயம் பற்றிய குவிமுனைப்புடன் எழுதப்பட்ட ஒரு குறுக்கு வடிவம் சமகால தென் ஆசியா, 10:1 (மார்ச் 2001) இல் இடம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
மீள் நினைவு, மீள் இணக்கம், மீள் விளக்கம்.

1 கொட்ஃபிறி குணதிலக
இனக்குழும மோதலைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை
2 லிஸ் பிலிப்சன்
இலங்கையில் பேச்சுவார்த்தைக்கான முறைவழிகள்
3 சங்கரன் கிருஷ்ணா
இலங்கையின் இனக்குழும மோதலில் இந்தியாவின் வகிபாகம்
4 மைக்கல் றொபேர்ட்ஸ்
சிங்களத்துவமும் சிங்கள தேசியமும்
5 விராஜ் ஜயவீர
இனக்குழும மோதலும் சிங்களப் பிரக்ஞையும்
6 தேவநேசன் நேசையா
தமிழ்த் தேசியம்
7 உ. சேரன்
ஆறாந்திணை: நினைவுகளும், வரலாறும் புலம் பெயர் தமிழரின் கற்பனையும்
8 டானியல் பாஸ்
மலையகத் தமிழர் அடையாளத்தின் பின் புல அமைவுகள்
9 அமீர் அலி
முஸ்லிம் சமூகத்தின் பன்முக அடையாளங்களும் அரசியல் தேர்ந்தெடுப்புகளும்
10 கொட்ஃபிறி குணதிலக
சமூக பொருளாதார அபிவிருத்தியின் இனக்குழும பரிமாணங்கள்
11 ராதிகா குமாரசுவாமி
அரசியலமைப்பு நியாயமை: பல் வேறுபாடு, இனக்குழுமத்துவம், மோதல்
12 தாரினி ராஜசிங்கம் சேனநாயக்க
எல்லைக் கோட்டில் இனக்குழுமத்துவம்: வரலாற்றை மாற்றியமைத்தல்
13 ஜயதேவ உயன்கொட
அரசியல் சீர்திருத்தம் என்னும் பிரச்சினை
14 நீரா உடகம
இனக்குழும மோதல்: ஆட்சியமைப்பு மாற்றமும் இறுதி மதிப்பீடும்.
15 றோஹான் எதிரிசிங்க
ஆட்சியமைப்பு பற்றிய விவாதிக்கப்படும் விடயங்கள்
16 சி. ஆர். டி. சில்வா மற்றும் டீ. பத்தலோமியூஸ்
மீள் இணக்க முறைவழியில் பௌத்த சங்கத்தின் வகிபாகம்
17 நெவில் ஜயவீர
இனக்குழும மோதலில் திருச்சபைகளின் வகிபாகம்
18 ஜெஃப்றி அபயசேகர
திருச்சபைகளின் வகிபாகம்: வரலாற்றுப் பின்புல நோக்கு
19 திரு கந்தையா
இலங்கையின் இனக்குழும மோதலும் ஊடகத்துறையும்

மார்க்கா நிறுவனம்.

அஞ்சல் பெட்டி எண் 601, 93/10 துட்டுகெமுனு வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. இலங்கை.
தொலை பேசி 94-1-828544 / 829051 தொலை நகல்:94 -1 -828597.
E-mail:marga@sri.lanka.net Website(URL): http://www.lanka.net/marga/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ல் 6வது

இலங்கையின் இனக்குழும மோதல் பற்றிய ஒரு வரலாறு
மீள் நினைவு, மீள் இணக்கம், மீள் விளக்கம்.

# தமிழ்த் தேசியம்

## தேவநேசன் நேசையா

மார்க்கா நிறுவனம்.